# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல் துறை

# மானியக் கோரிக்கை எண்.22

# கொள்கை விளக்கக் குறிப்பு 2012 – 2013

## I. முன்னுரை :

வெளிநாட்டவரின் தாக்குதலிலிருந்தும், உள்நாட்டு கலவரங்களிலிருந்தும் குடிமக்களை காப்பது ஆட்சியரின் முக்கிய கடமை என்பது வரலாறு கூறும் உண்மையாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, வெளிநாட்டவரின் தாக்குதலிலிருந்து மக்களை பாதுகாத்தல் மத்திய அரசின் கடமையாகும். அதே போல் பொது அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி உள்நாட்டில் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவது மாநில அரசின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பை செம்மையான முறையில் நிறைவேற்ற வலிமையும், திறமையும் வாய்ந்த ஒரு கட்டுப்பாடு மிக்க காவல் துறை அவசியமானது.

தமிழ்நாட்டு மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்வதில் உறுதி பூண்டுள்ள நான் அப்படிப்பட்ட ஒரு காவல் துறையை உருவாக்க எப்பொழுதும் முயன்று வந்துள்ளேன். 2011–12ல் நான் எடுத்த நடவடிக்கைகள் இதற்கு சான்றாகும். எனது அரசின்

தெளிவான வழிமுறைகளை பின்பற்றி காவல் துறையானது சமூக விரோதிகள் மற்றும் தீய சக்திகளை ஒடுக்கி பொது மக்கள் அமைதியான சூழ்நிலையில் அச்சமின்றி வாழ வழி வகுக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

1859ல் உருவான தமிழ்நாடு காவல் துறை, பொது மக்களின் அற்புதமான சேவையில் 152 ஆண்டுகள் பயணித்து வரலாறு படைத்துள்ளது. பழமையான ஆயுதங்களை கொண்டிருந்தது மட்டுமல்லாமல், தனது சிந்தனையிலும், செயல்பாட்டிலும் பொது மக்களிடமிருந்து விலகி காணப்பட்ட காவல் துறையை நவீனமயமாக்கும் நோக்கத்துடன் 1991ல் எனது தலைமையில் அமைந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது நாட்டிற்கே முன் உதாரணமாக அமைந்தது. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 1992ல் தொடங்கப்பட்டன. கடலோர எல்லையை தீவிரமாக கண்காணிக்கும் பொருட்டு கடலோரக் காவல் படை 1994–ல் உருவாக்கப்பட்டது. தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 1991–ல் உருவாக்கப்பட்டது. காவலர்களுக்கான குடியிருப்புகள் மற்றும் காவல் நிலையங்களுக்கான கட்டடங்கள் போன்ற கட்டுமானப் பணிகள் அதிகரிக்கப்பட்டன. வாகன வசதிகள், தொலை தொடர்பு வசதிகள் பெருகின. நவீன பயிற்சி முறைகள்

பின்பற்றப்பட்டன. இதனால் உதவியென நாடவும், பொதுமக்கள் தமது குறைகளை தீர்த்துக் கொள்ளவும், பொது மக்களின் உற்ற நண்பனாக காவல் துறை விளங்கத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து காவல் துறையானது பொதுமக்களுடன் நட்புறவு கொண்டு அதன் மூலம் துல்லியமான தகவல்களை சேகரித்து குற்றவாளிகளை விரைவாக கைது செய்யும் பணியை செம்மையாக செய்து வருகிறது. சட்டம்–ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகளை மனித நேயத்துடன் கையாண்டு, அவற்றிற்கான காரணங்களை கண்டறிந்து அறிகுறியை மட்டும் களைவதற்கு பதிலாக காரணத்திற்கான தீர்வை காணும் முயற்சிகள் காவல் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

உள் துறையின் கீழ் காவல் துறை செயல்படுகிறது. காவல் துறை தலைமை இயக்குநர், மாநில காவல் துறையின் தலைவராவார். அவருக்கு உதவியாக தலைமையிடத்தில் கூடுதல் காவல் துறை இயக்குநர் அல்லது காவல் துறை தலைவர் நிலையில் உள்ள அதிகாரிகள் பல்வேறு பிரிவுகளுக்கு தலைமை வகிக்கின்றனர். அவர்களின் கீழ், நான்கு மண்டல காவல் துறை தலைவர்களும் ஆறு காவல் ஆணையாளர்களும் உள்ளனர். மண்டல காவல் துறை தலைவர்களின் கீழ், 12 சரக துணை காவல் துறை

தலைவர்களும், 33 மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும் செயல்படுகின்றனர். இவர்களின் கீழ் துணை காவல் கண்காணிப்பாளர்கள், உதவி காவல் கண்காணிப்பாளர்கள் அல்லது உதவி காவல் ஆணையர்கள் தலைமையில் 247 உட்கோட்ட அலுவலகங்கள் உள்ளன. 198 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட மொத்தம் 1,498 காவல் நிலையங்கள், 60 புற காவல் நிலையங்கள், 218 போக்குவரத்து காவல் நிலையங்கள் முதலியவற்றை அடித்தளத்தில் கொண்ட பிரமிடு போன்ற அமைப்பு, சட்டம் ஒழுங்கு பராமரித்தல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் முதலிய பணிகளை செம்மையாக செய்து வருகிறது. மேலும் குறிப்பிட்ட பணிகளுக்காக கீழ்கண்ட சிறப்பு பிரிவுகள் உள்ளன.

i) குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை – பல மாநிலங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை புலன் விசாரணை செய்வதே இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும். மேலும் கள்ள நோட்டு, கணினி சார்ந்த குற்றங்கள் மற்றும் ஆள் கடத்தல் போன்ற வழக்குகளும் இந்த பிரிவில் விசாரணை செய்யப்படுகின்றன.

ii) குற்றப் பிரிவு – மத அடிப்படைவாத அமைப்புகள் தொடர்புடைய குற்றங்கள், போதைப் பொருள் கடத்தல்,

வீடியோ திருட்டு போன்ற குற்ற வழக்குகளை கவனிப்பதே இப்பிரிவின் பணியாகும்.

iii) பொருளாதாரக் குற்றத் தடுப்பு பிரிவு – வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட நிதி மோசடி மற்றும் நிதி கையாடல் வழக்குகளை விசாரணை செய்வதே இப்பிரிவின் முதன்மையான பணியாகும்.

iv) சிறப்புச் செயல்பாடுகள் பிரிவு – இப்பிரிவு அதிரடிப் படை வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கவும், பல்வேறு வகையான பணிகளை மேற்கொள்ளும் சிறப்புப் பயிற்சி பெற்ற அதிரடிப்படை வீரர்கள் கிடைக்கச் செய்வதை உறுதி செய்கிறது.

v) வெடிகுண்டுகளை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை – இச்சிறப்பு பிரிவு வெடிகுண்டுகளை விரைவான நடவடிக்கை மூலம் கண்டுபிடித்து அவற்றை செயலிழக்கச் செய்யவும், வெடிகுண்டுகளை அகற்றுவதிலும் ஈடுபட்டு வருகிறது.

vi) நுண்ணறிவுப் பிரிவு – பாதுகாப்பு, பொது அமைதி மற்றும் ஒழுங்கு குறித்த நுண்ணறிவு தகவல்களை சேகரித்து ஒப்பாய்வு செய்து உரியவர்களுக்கு வழங்குகிறது.

vii) தொழில்நுட்பப் பணிகள் – காவல் துறையின் அன்றாடப் பணிகளுக்குத் தேவையான தகவல் தொழில் நுட்ப கட்டமைப்பு வசதிகளை செய்து தருவதுடன் அவற்றை பராமரித்து வருகிறது. இயற்கை சீற்றங்களின் போது இப்பிரிவு அவசர தகவல் தொடர்பு வசதிகளை செய்து கொடுக்கிறது.

viii) சிறப்பு இலக்குப் படை – இப்பிரிவு விமானக் கடத்தல், ஆயுதம் ஏந்திய போராட்டம், உள்நாட்டு கலகம், பயங்கரவாத நடவடிக்கைகள், ஆட்கடத்தல் போன்ற குற்றச்செயல்களை தடுப்பதற்கான சிறப்புப் பயிற்சி பெற்ற நிபுணர்களைக் கொண்டதாகும்.

ix) சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் – குடிமையியல் உரிமை பாதுகாப்பு சட்டம் மற்றும் பட்டியலினத்தவர் / பழங்குடியினருக்கு எதிரான (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

x) பயிற்சி – காவல் உயர் பயிற்சியகம், காவலர் பயிற்சிக் கல்லூரி, காவலர் தேர்வுப் பள்ளிகள் மற்றும் பணியிடைப் பயிற்சி மையங்கள் ஆகியன இப்பிரிவில் அடங்கும். புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் காவல் படையினருக்கு பயிற்சி அளிப்பதும் காவல் துறையினருக்கு புத்தாக்கப் பயிற்சி அளிப்பதும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

xi) தமிழ்நாடு சிறப்பு காவல்படை அணிகள் – ஆவடியில் உள்ள படைக்கல மையம் உட்பட தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் **16** காவல் அணிகள் உள்ளன. இவை தேவையான நேரங்களில் உள்ளூர் காவல் துறையினருடன் இணைந்து செயலாற்றுகின்றன.

xii) கடலோர காவல் படை – கடல் வழியாக பொருட்களை கடத்துதல் மற்றும் தீவிரவாதிகள் ஊடுருவல் போன்றவற்றை தடுப்பதற்காக இப்பிரிவு **1994** ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. கடற்படை, கடலோர பாதுகாப்புப் படை, உள்ளூர் காவல் துறை, மீன் வளத்துறை, சுங்கத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளோடு கடலோர காவல் படையினர் கடலோர பாதுகாப்பிற்கு தேவையான நுண்ணறிவு தகவல்களை சேகரித்து ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றனர்.

xiii) மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு – கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும் மற்றும் சட்டத்திற்கு விரோதமாக மதுபானம் வைத்துக் கொள்வதையும், எடுத்துச் செல்வதையும் விற்பனை செய்வதையும் ஒழிப்பதே இப்பிரிவின் நோக்கமாகும்.

xiv) ரயில்வே காவல்படை– ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் நிகழும் குற்றங்களை தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

xv) மோப்ப நாய் அலகு – இது ஒவ்வொரு மாவட்ட காவல் பிரிவிலும், மற்றும் சிறப்பு இலக்குப் படை, ரயில்வே காவல் படை, அதிரடிப் படை போன்ற சிறப்புப் பிரிவுகளிலும் உள்ளது. குற்றவாளிகளை கண்டுபிடிப்பதிலும், வெடி மருந்துப் பொருட்கள் மற்றும் போதைப் பொருட்களை மோப்பம் பிடித்து வெளிக்கொணர்வதற்கும் இவை உதவுகின்றன.

xvi) குதிரைப்படை பிரிவு – இப்பிரிவு சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ளது. இவை கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

xvii) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் – காவல் துறைக்குத் தேவையான பணியாளர்களை வெளிப்படையான முறையில் விரைவாக தேர்ந்தெடுக்க 1991 ஆம் ஆண்டு இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

xviii) ஊர்க்காவல் படை – தமிழ்நாடு ஊர்க்காவல் படை, ஒரு தன்னார்வ சேவை அமைப்பாகும். இப்படை, சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், வெள்ளம், தீ விபத்து, புயல் போன்ற அவசர கால நெருக்கடிகளின் போதும் காவல் துறையினருக்கு உதவி புரிந்து வருகிறது.

xix) மாநில குற்ற ஆவணக் காப்பகம் – விரிவான குற்றப் பதிவு முறையை பராமரிப்பதன் மூலம் காவல் படையின்

செயல் திறனை அதிகப்படுத்த மாநில குற்ற ஆவணக் காப்பகம் உதவுகிறது.

## II. சட்டம் – ஒழுங்கு :

அமைதி மற்றும் நிலைத்தன்மையை ஏற்படுத்தி அமைதியான சூழ்நிலையில் பொதுமக்கள் அச்சமின்றி அன்றாடப் பணிகளை கவனிக்க ஏதுவாக சட்டம்–ஒழுங்கினைப் பராமரிப்பது மாநில அரசின் முதன்மையான கடமையாகும். தீய சக்திகளை ஒடுக்கி, பொது மக்களை காப்பாற்ற தமக்கு வழங்கப்பட்டுள்ள தெளிவான வழிமுறைகளை பின்பற்றி, காவல் துறை திடமாகவும், முதிர்ச்சியுடனும், பொறுமையுடன் செயல்பட்டு பொது அமைதியை அச்சுறுத்திய பல்வேறு சூழ்நிலைகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றுள்ளது. காவல் துறையினர் சட்ட விதிகளை பேணி பராமரிக்க சுதந்திரமாக செயல்படும் வகையில் அவர்களுடைய பணியில் எவ்வித குறுக்கீடுகளோ, உறவினர் சலுகைகளோ இன்றி செயல்படும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு பொது அமைதி மற்றும் மத நல்லிணக்கத்தை பாதுகாக்கும் சிறந்த ஒரு மாநிலமாக விளங்குகிறது. கடந்த **11** மாதங்களில் **2,053** நபர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழும், **9** நபர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் சிறையில்

அடைக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசியப் பொருட்களை கடத்துதல் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் தமது கடமையை நிறைவேற்றுவதில் எவ்வித குறுக்கீடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பது வெளிப்படையாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நாட்டில் பல மாநிலங்களை அச்சுறுத்தும் மதக் கலவரங்கள் மற்றும் மோதல்கள் தமிழகத்தில் இல்லை. ஏழைகளுக்கும், அடித்தளத்தில் உள்ளவருக்கும் அக்கறையுடனும் கருணையுடனும் அரசு உதவிக்கரம் நீட்டுவதால், தமிழகத்தில் தீவிரவாத சக்திகள் காலூன்ற இயலவில்லை. காவல் துறை தொடர்ந்து விழிப்புடன் செயல்படுவதாலும், தொழிலாளர் போராட்டம் ஏதுமின்றி இருப்பதாலும், முதலீடு செய்வோருக்கு நல்ல ஒரு சூழல் ஏற்பட்டு வளர்ச்சிப் பாதையில் வேலை வாய்ப்பு பெருகி, ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவரும் பங்கேற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் எந்த ஒரு சூழ்நிலையும் உருவாகாதவாறு அரசு முனைப்புடன், திட்டமிட்டு, முன்கூட்டியே பெறப்படும் தகவல்களைக் கொண்டு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, பொது மக்களின் நன்மையை உறுதிபடுத்தும் வண்ணம் செயல்பட்டு வருகிறது.

திருச்சி மற்றும் மதுரை போன்ற மாநகரங்கள், குண்டர்களின் கொடுங்கோன்மை பிடியிலிருந்து

விடுவிக்கப்பட்டுள்ளன. நில உரிமையாளர்களிடமிருந்து அவர்களின் சொத்துக்களை அபகரித்து வந்த நில மோசடி கும்பல்கள் தயவு–தாட்சண்யமின்றி ஒடுக்கப்பட்டதன் மூலம் பொது மக்கள் தமது சட்டப்பூர்வ உரிமையுடன் கூடிய சொத்துக்களை இடையூறு இன்றி அனுபவிக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

i) நில அபகரிப்பு தடுப்பு பிரிவுகள் :

நில அபகரிப்பு தடுப்புப் பிரிவுகள் அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு பிரிவும், சென்னையைத் தவிர மற்ற ஐந்து ஆணையரகங்களிலும் தலா ஒரு பிரிவும், சென்னையில் இரு பிரிவுகளும் மற்றும் மாநில காவல் துறை தலைமையகத்தில் ஒரு பிரிவுமாக மொத்தம் 39 பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெறப்பட்ட 34,703 புகார்களில் இதுவரை 1,225 வழக்குகள் (அட்டவணை–I) பதிவு செய்யப்பட்டு, 1,299 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ரூ.758.04 கோடி மதிப்புள்ள 1,317.15 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் மீட்கப்பட்டு நில உரிமைதாரர்களிடம் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நில அபகரிப்பு தொடர்பான வழக்குகளை விரைவாக விசாரணை செய்து முடிக்கும் வகையில் 25 விரைவு சிறப்பு

நீதிமன்றங்களை அமைப்பதற்கு இவ்வரசு 1.8.2011–இல் ஆணையிட்டுள்ளது.

ii) காவல் துறையின் பாதுகாவலின் போது
ஏற்பட்ட மரணங்கள் :

கடந்த 11 மாதங்களில் காவல் துறை பாதுகாவலின் போது 4 மரண சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. காவல் துறையினரின் நடவடிக்கைகளால் மரணங்கள் நிகழுமாயின் அவற்றை அரசு மிகவும் கடுமையாக நோக்குவதுடன் அத்துமீறிய காவல் துறையினர் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சில நிகழ்வுகளில், கைது செய்யப்பட்ட நபர்கள் ஏற்கனவே உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்ததாலும் பலவீனமான நிலையில் இருந்ததாலும் இப்படிப்பட்ட சோக நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. இது போன்ற மரணங்கள் ஏற்பட்ட போது, அதற்கான காரணங்களை கண்டறிய நீதித் துறை நடுவர் மூலம் சுதந்திரமான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

iii) காவல் துறை துப்பாக்கிச் சூடு :

அசாதாரண நேர்வுகளில் மட்டும் துப்பாக்கிச் சூடு பயன்படுத்தப்படுகிறது. 2006 முதல் 2012 முடிய உள்ள நிலவரம் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது :–

| வ. எண் | வருடம் | துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2006 | 17 |
| 2. | 2007 | 13 |
| 3. | 2008 | 17 |
| 4. | 2009 | 8 |
| 5. | 2010 | 12 |
| 6. | 2011 | 6 |
| 7. | 2012 | 1 |

கலவரக் கும்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுவாக கண்ணீர் புகை குண்டுகள் அல்லது ரப்பர் குண்டுகள் முதலியவற்றை பயன்படுத்துமாறு காவல் துறையினர் பணிக்கப்பட்டுள்ளனர். தீவிரமான கலவரச் சூழ்நிலைகள் மற்றும் அவசியமாகத் தேவைப்படும் சமயங்களில் மட்டுமே, உயிர்கள் மற்றும் பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க துப்பாக்கிச் சூடு நிகழ்த்தப்படுகிறது.

**III. குற்ற நிகழ்வு நிலவரம் :**

குடும்பத் தகராறு, வாய்த்தகராறு, தனிப்பட்ட பகை, நிலத்தகராறு, பணம் கொடுத்தல் வாங்கல் தொடர்பான தகராறுகள் மற்றும் குடிபோதையில் ஏற்படும் தகராறு

போன்றவை சமூகத்தில் குற்ற நிகழ்வுகள் நடைபெற சில முக்கிய காரணங்களாகும். குற்ற நிகழ்வுகளால் பாதிப்படைந்தவர்கள், காவல் நிலையங்களை அணுகும் போது, அனைத்து குற்றப் புகார்களையும் பதிவு செய்வது காவல் துறையின் கடமையாகும். இதுவே, எனது அரசின் தெளிவான கொள்கையாதலால், குற்றப் புகார்களை முறையாக பதிவு செய்து, அப்புகார்கள் மீது காலதாமதமின்றி புலன் விசாரணை மேற்கொள்ள காவல் துறையினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் நிகழ்ந்த கொலைச் சம்பவங்களின் விவரம் அட்டவணை–IIல் தரப்பட்டுள்ளது. 2002 முதல் 2005 வரை கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்து வந்தது என்பது இந்த அட்டவணையிலிருந்து புலனாகும். 2006 முதல் 2011 முடிய நிகழ்ந்துள்ள கொலைச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன. கொலைக் குற்றம் உட்பட குற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கைகள் பயனளிக்கத் துவங்கியுள்ளன. ஆகவே, 2012ம் ஆண்டில் குற்ற நிகழ்வுப் போக்கு உறுதியாக மாறி, குற்ற நிகழ்வுகள் குறையும் நிலை நிச்சயமாக ஏற்படும்.

உள்துறை செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர்

அடங்கிய குழு அமைக்கப்பட்டு மாதந்தோறும் குற்ற நிகழ்வுகள் குறித்து கண்காணிக்கப்படும்.

i) பெண்களுக்கெதிரான குற்றங்கள் :

எனது தலைமையிலான அரசால் 1992ல் மாநிலத்தில் முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இக்காவல் நிலையங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து, இன்று நாட்டிலேயே அதிக மகளிர் காவல் நிலையங்கள் தமிழகத்தில் தான் உள்ளன எனப் பெருமை கொள்ளலாம். மகளிரின் குறைகளைக் களைய, முழுவதும் மகளிரால் நிருவகிக்கப்படும் 198 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மாநிலத்தில் உள்ளன. வரதட்சணை கொடுமை மற்றும் வரதட்சணை தொடர்பான இறப்புகள், பாலியல் வன்கொடுமைகள் ஆகிய மகளிருக்கெதிரான குற்றங்கள் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டதால் குறைந்துள்ளன என்பது மறுக்க இயலாத உண்மை.

தீவிர ரோந்துப் பணி மூலமாகவும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள பெண்கள் உதவி மையம் மற்றும் ஆலோசனை மையங்கள் மூலமாகவும் பெண்களுக்கெதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்த

அனைத்து தேவையான நடவடிக்கைகளையும், இந்த அரசு மேற்கொள்ளும்.

**<u>IV. சாலை விபத்துகள் :</u>**

சாலை விபத்துக்களை தடுப்பது என்னுடைய அரசின் ஒரு முக்கிய குறிக்கோளாகும். பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கையால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் கவலை தரக்கூடிய விஷயமாகும். சாலை விதிகளை முறையாக பின்பற்றுவதினாலும் போக்குவரத்து மேலாண்மையை நவீனப்படுத்துவதாலும் மட்டுமே சாலை விபத்துகளை பெரிதும் தவிர்க்க முடியும் என்பதை காவல் துறை நன்கு உணர்ந்துள்ளது. இதன் பொருட்டு ரூபாய் 150 கோடி செலவில் ஒருங்கிணைந்த சாலைப் போக்குவரத்து மேலாண்மை முறை சென்னையில் நிறுவப்படவுள்ளது. சென்னையில் சாலை விதிகளை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்க ஜூன் திங்கள் 2011ல் அறிமுகப்படுத்தப்பட்ட மின்னணு ரசீது முறை நல்ல பலனை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலும் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

தீவிர நெடுஞ்சாலை ரோந்துப் பணிகளால், சாலைப் போக்குவரத்து விதிகள் முறையாக கடைப்பிடிக்கப்படுவதை அமல்படுத்தவும், சாலைகளில் நிகழும் குற்ற நிகழ்வுகளைத்

தடுக்கவும் மற்றும் சாலை விபத்துகளில் பாதிக்கப்படுவோரை உடனுக்குடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்று உயிர்காக்கும் சிகிச்சை அளிக்கச் செய்வதைக் கவனிக்கவும் ஏதுவாகிறது. 2003 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட 122 வாகனங்கள் மேற்படி நெடுஞ்சாலை ரோந்துப் பணியில் உள்ளன. 2011–12 ஆம் ஆண்டில் கூடுதலாக 138 வாகனங்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளினால் விபத்துகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சாலை விபத்துகள் குறித்த விவரங்கள் அட்டவணை–Vல் கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>V. காவல் துறை நவீனமயமாக்கல் :</u>**

காவல் துறை நவீனமயமாக்கல் திட்டம் 1991 ஆம் ஆண்டு நாட்டிலேயே முதன்முறையாக மாநில நிதி ஆதாரங்களைக் கொண்டு என்னால் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வெற்றியை கண்டு, மத்திய அரசு, 2001 ஆம் ஆண்டு முதல், நாடு முழுவதும் மத்திய–மாநில அரசின் பங்களிப்பாக 1:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் இத்திட்டத்தை விரிவுபடுத்தியது. மத்திய அரசு, 2007–08 முதல் மத்திய–மாநில அரசின் பங்களிப்பாக 3:1 என்ற

விகிதாச்சாரத்தில் நிதி வழங்குகிறது. இருப்பினும் மத்திய அரசு வழங்கும் நிதி உதவி போதுமானதாக இல்லை. இத்திட்டத்தின் கீழ் மத்திய–மாநில அரசுகளால் வழங்கப்பட்டுள்ள நிதி உதவி குறித்த விவரங்கள் அட்டவணை–VIல் உள்ளது. 2011–12 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ரூ.77.29 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளது. இதிலும் ரூ.42.27 கோடி மட்டுமே தற்போது விடுவிப்பு செய்துள்ளது. 2009–10 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முழுவதுமாக பயன்படுத்தப்படாமல் மீதம் நிதி உள்ளதை காரணம் காட்டி ரூ.15.23 கோடி அளவுக்கு கூடுதலாக வழங்கப்பட வேண்டிய நிதியை, மத்திய அரசு, நிறுத்தி வைத்துள்ளது. மேற்கண்ட மத்திய அரசு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி போதுமானதாக இல்லாததால் மாநில அரசு தம் நிதியிலிருந்து காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு வேண்டிய கூடுதல் நிதியை வழங்குகிறது. 2011–12 ஆம் ஆண்டில் மத்திய அரசு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவுக்கு மேல் கூடுதலாக மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்ட தொகை கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணி குறித்த விவரம் | 2011–12 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| 1. | காவலர் குடியிருப்பு | ரூ.287.84 கோடி |
| 2. | வாகனங்கள் | ரூ.13.67 கோடி |
| 3. | கணினிகள் மற்றும் தொலை தொடர்பு வசதிகள் | ரூ.5.06 கோடி |
| 4. | காவல் நிலையங்கள் மற்றும் இதர கட்டடங்கள் | ரூ.49.86 கோடி |
| | **மொத்தம்** | **ரூ.356.43 கோடி** |

**<u>VI. நலத்திட்டங்கள் :</u>**

i) தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம் :

தமிழக காவல்துறையில் பணிபுரியும் அரசிதழில் பதிவுபெறா பணியாளர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கு நிதி உதவி மற்றும் இதர நிவாரண உதவிகளை வழங்கும் நோக்கத்திற்காக இத் திட்டம் 1957 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. காவல் பணியாளர்கள் மற்றும் காவல்துறையில் பணியாற்றும் அமைச்சுப் பணியாளர்களிடமிருந்து மாதந்தோறும் பெறப்படும் சந்தாவைக் கொண்டு இந்த நிதியம் செயல்படுகிறது.

அ) இதனைக் கொண்டு குடும்ப நிவாரணம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:-

- உறுப்பினர் இறக்க நேரிட்டால் ரூ.15,000/—ம்,
- உறுப்பினரின் குடும்ப உறுப்பினர் இறக்க நேரிட்டால் ரூ.5,000/—ம் நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

ஆ) காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு, கல்லூரிகள் அல்லது தொழில் நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து மேற்படிப்பை மேற்கொள்ள தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித் தொகையாக இந்நிதியத்தின் கீழ் ரூ.3,500/— முதல் ரூ.10,000/— வரை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2011-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் முடிய, 4,287 குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.3.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, இந்நிதியத்திற்கு ஆண்டுதோறும் அரசு மானியமாக ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இம்மானியத் தொகை ஆண்டொன்றிற்கு எனது அரசால் 2011—2012 முதல் ரூ.1.2 கோடியாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இம்மானியம் கீழ்க்கண்ட திட்டங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.

ii) பரிசுத் திட்டங்கள் :

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்தில், முதல் 10 இடங்களில் தேர்ச்சி பெறும் காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. பத்தாம் வகுப்பு தேர்வில் முதல் மூன்று இடங்களுக்கு முறையே, ரூ.6,500/–, ரூ.4,500/– மற்றும் ரூ.2,500/– எனவும்; நான்கு முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவ மாணவியர்களுக்கு தலா ரூ.2,000/– எனவும்; பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில், முதல் மூன்று இடங்களுக்கு முறையே, ரூ.7,500/–, ரூ.5,500/– மற்றும் ரூ.3,000/– எனவும்; நான்கு முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவ மாணவியர்களுக்கு தலா ரூ.2,500/– எனவும் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

iii) தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித்தொகை :

இத்திட்டத்தின்படி காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளை ஊக்கப்படுத்தி அவர்கள் மேற்படிப்பை தொடரும் வகையில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவ மாணவியர்களுக்கு தலா ரூ.20,000/– வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை எனது அரசால் 2011–2012 ஆம் ஆண்டு முதல் ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

iv) கருணைத்தொகை :

காவல் துறையினர் பணியில் நிகழ்த்தும் வீர தீரச் செயல்களுக்கு ஒரு அங்கீகாரமாக, அனைத்து காவல் பணியாளர்களுக்கும் எவ்வித பாகுபாடுமின்றி, ஒரே அளவில், கீழ்கண்டவாறு நிதி உதவி வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | உயிரிழப்பு ஏற்பட்டால் | ரூ. 5 லட்சம் |
| 2. | நிரந்தர ஊனம் ஏற்பட்டால் | ரூ. 2 லட்சம் |
| 3. | பணியில் ஈடுபட இயலாதவாறு ஒரு கை / கால் / கண் இழப்பு / பாதம் மற்றும் விரல்கள் இழப்பு போன்றவை ஏற்பட்டால் | ரூ. 1 லட்சம் |
| 4. | தீக்காயம், குண்டடி காயம், எலும்பு முறிவுகள் ஏற்பட்டால் | ரூ. 50,000/– |
| 5. | சிறுகாயம் ஏற்பட்டால் | ரூ. 10,000/– |

பணியின் போது வீர தீரச் செயல்களினால் உயிரிழக்க நேரிடும் காவல் பணியாளரின் வாரிசுதாரருக்கு மேலே குறிப்பிடப்பட்ட தொகையுடன், பணியாளர் கடைசியாக பெற்ற சம்பளம் அவரது பணிக்காலம் முடியும் வரையில், குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

v) தமிழ்நாடு காவல்துறை பணியாளர் காப்பீட்டுத் திட்டம் :

இரண்டாம் நிலை காவலர் முதல் காவல்துறை தலைமை இயக்குநர் வரை இத்திட்டத்தின் கீழ் காப்பீடு

பெறுகின்றனர். பணியின் போது உயிரிழப்பு நிகழ்ந்தாலோ அல்லது நிரந்தர ஊனம் அல்லது பகுதி ஊனம் ஏற்பட்டாலோ, நிதி உதவி வழங்கப்படுகிறது.

vi) உணவு மானியத் திட்டம் :

காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு காக்கி நிற குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், நியாய விலைக் கடைகளில் அரிசி விலையில்லாமலும்; கோதுமை, சர்க்கரை, மைதா மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் 50 சதவீத மானியத்துடனும் வழங்கப்படுகின்றன. மேற்படி திட்டத்திற்கென வருடத்திற்கு ரூ.9.13 கோடி செலவு ஏற்படும்.

vii) தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி :

பணியின் போது உயிரிழக்க நேரிடும் காவல் பணியாளரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் ரூபாய் இரண்டு லட்சம் வழங்கப்படுகிறது. மே திங்கள் 2011 ஆம் ஆண்டு முதல் மார்ச் திங்கள் 2012 வரையிலான 11 மாதங்களில், பணியின் போது உயிரிழந்த 51 காவல் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு

மொத்தம் ரூ.1.02 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

viii) குறைகளைக் களைதல் :

2002 ஆம் ஆண்டில் காவல்துறை வரலாற்றில் முதன்முதலாக என்னால் 8,395 காவல் துறை பணியாளர்களிடமிருந்து மனுக்கள் நேரடியாக பெறப்பட்டு அவை மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து, குறைகளை கேட்டறிந்து தீர்வு செய்யும் முறை முறைபடுத்தப்பட்டு, குறைகளைக் களையும் பணியானது காவல்துறை தலைமை இயக்குநரில் இருந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வரை மேற்கொள்ளப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட அட்டவணையின்படி மனுக்கள் பெறப்படுகின்றன. 2011 மற்றும் 2012, மார்ச் திங்கள் வரை 12,115 மனுக்கள் பெறப்பட்டு 8,416 மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு குறைகள் தீர்க்கப்பட்டன.

ix) காவல் மருத்துவமனைகள் :

காவல் பணியாளர்களுக்கென்று அடிப்படை மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், புனித தோமையார் மலை, வேலூர், கடலூர், விருதுநகர்,

திருநெல்வேலி, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம் அணி, ஆவடி மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை ஒன்பதாம் அணி, மணிமுத்தாறு ஆகிய 12 மையங்களில் காவல் மருத்துவமனைகள் செயல்படுகின்றன. இவை தவிர, ரூ.1.01 கோடி செலவில் 2011–12 ஆம் ஆண்டில் அட்டவணை–VIIல் குறிப்பிட்டுள்ளவாறு 10 தமிழ்நாடு சிறப்பு காவல் படை தலைமையிடங்களிலும் மற்றும் அட்டவணை–VIIIல் குறிப்பிட்டுள்ளவாறு 26 ஆயுதப்படை தலைமையிடங்களிலும் ஆக மொத்தம் 36 இடங்களில், புறநோயாளிகள் மருத்துவ சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறப்பு காவல் படை மற்றும் ஆயுதப்படையில் பணிபுரியும் காவலர்கள் தொடர்ந்து, பல நாட்கள் பணிநிமித்தமாக குடும்பத்தைப் பிரிந்து வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதால், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள புற நோயாளிகள் மருத்துவ மையங்களினால் உடனடி மருத்துவ சேவைகள் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

x) சிறப்பு காவல் அங்காடிகள் :

நாட்டிலேயே முதல் முறையாக அன்றாட தேவைகளுக்கான பொருட்களை வழங்குவதற்கு காவல்

துறையினருக்கென சிறப்பு அங்காடிகள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிறப்பு காவல் அங்காடிகள் ஆவடி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கென முதல் கட்டமாக ரூபாய் ஒரு கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. காலஞ்சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் பணிபுரியும் காவல் துறையினரின் குடும்பத்தினர் இந்த அங்காடிகளில் வழங்கப்படும் சலுகைகளை பெற தகுதியுடையவர் ஆவர். இந்த அங்காடிகளில் வழங்கப்படும் பொருட்கள், மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டு வழங்கப்படுவதால் பொருட்களின் விலை சந்தை விலையைக் காட்டிலும் மிகக் குறைவானதாக உள்ளது. இப்புதிய திட்டத்தினால் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட காவல் துறையினரின் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

xi) காவல் பணியாளர்களுக்கான இடர் படி :

சமூக விரோதிகள் மற்றும் கொடுங்குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை பிடிக்கும் முயற்சியில் ஈடுபடும் பொழுது காவல் துறை அதிகாரிகள் அபாயத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது. எனவே, காவல் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இடர் படியினை காலத்திற்கேற்ப உயர்த்தி வழங்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே காவலர் முதல் ஆய்வாளர் வரை மாதந்தோறும் ரூ.270/– என வழங்கப்பட்டு

வந்த இடர் படியினை ரூ.300/– ஆகவும், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு ரூ.315/– என வழங்கப்பட்டு வந்த இடர் படியினை ரூ.350/– ஆகவும் உயர்த்தி வழங்க என்னால் ஆணையிடப்பட்டுள்ளது.

xii) உணவுப்படி :

சென்னை மாநகரத்தில் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை உள்ளவர்களுக்கு உணவுப்படி மாதத்திற்கு 20 நாட்கள் என்ற உச்ச வரம்பின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.100/– என வழங்கப்பட்டு வந்தது. காவல் துறை பணியாளர்களின் பொறுப்பு நிறைந்த பணியை கருத்தில் கொண்டும் அவர்கள் எந்நேரமும் பணியை ஏற்க தயாராக இருக்க வேண்டிய சூழ்நிலையை கருத்தில் கொண்டும், மாதத்திற்கு 20 நாட்கள் என்ற உச்ச வரம்பினை தளர்த்தி, பணி செய்யும் அனைத்து நாட்களுக்கும் உணவுப்படியை நீட்டித்து வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

## VII. பொதுமக்கள் மற்றும் காவல்துறையினரிடையே நல்லுறவை வளர்க்கும் நடவடிக்கைகள்:

i) அனைத்து காவல் நிலையங்களுக்கும் நாற்காலிகள் வழங்குதல் :

காவல் நிலையத்திற்கு புகாரை பதிவு செய்ய வரும் பொதுமக்களுக்கு, காவல் நிலையங்களில் அவர்கள் அமர

இருக்கை வசதிகள் இல்லாத நிலையே நிலவி வந்தது. அதனால் அவர்கள் காவல் நிலையங்களுக்கு வெளியில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்களுக்கு கண்ணியம் அளித்து, வசதி செய்து கொடுக்கும் வகையில் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 10 நாற்காலிகளை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நடவடிக்கையின் மூலம் தமிழ்நாடு, நாட்டிலேயே காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களுக்கு இருக்கை வசதிகள் வழங்கிய முதல் மாநிலமாக திகழ்வதுடன், நாட்டுக்கே ஓர் முன் உதாரணமாகவும் திகழ்கிறது.

ii) கிராம கண்காணிப்பு குழுக்கள் :

உடனுக்குடன் நுண்ணறிவு தகவல்களைப் பெறுவதற்காகவும், பிரச்சனைகளை முன்கூட்டியே கணிப்பதற்காகவும் மாநிலத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் கிராம கண்காணிப்பு குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் காவல் நிலைய அதிகார வரம்பிற்குள் உள்ள அனைத்து கிராமங்களின் பிரதிநிதிகளும் பங்கு பெறும் வகையில் கூட்டமொன்று மாதம் ஒரு முறை நடத்தப்படும். இதனால் பொதுமக்கள் மற்றும் காவல் துறையினரிடையே நல்லுறவு ஏற்படும். இதற்கென ரூ.1.56 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

iii) சிறார் மற்றும் சிறுமியர் குழுக்கள் :

சிறார் மற்றும் சிறுமியர் தமது ஓய்வு நேரங்களில் பயிற்சிகளைப் பெற்று, ஒழுக்கமுள்ளவராக திகழ்ந்து சட்டத்தை மதிக்கும் சிறந்த குடிமக்களாக உருவாக வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், தமிழ்நாட்டில், முதன் முதலில், 17.09.2003 அன்று சிறார் குழுக்கள் என்னால் ஏற்படுத்தப்பட்டன. இந்த முன் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், மேலும் 50 சிறார் குழுக்கள் 2011–2012ல் ஒப்பளிக்கப்பட்டன. இந்த குழுக்களின் மூலம் சிறுவர் மற்றும் சிறுமியர் பயன்பெறுவதால், இந்த குழுக்களுக்கு சிறுவர் மற்றும் சிறுமியர் குழுக்கள் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிற்கும் அளிக்கப்படும் நிதி உதவி ஆண்டொன்றுக்கு ரூ.66,000/–லிருந்து ரூ.75,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது நமது மாநிலத்தில் மொத்தம் 117 குழுக்கள் செயல்படுகின்றன.

## VIII. காவல் துறையில் பெண்கள்:

பெண்களிடமிருந்து புகார்களை சரியான முறையிலும், அக்கறையோடும், கவனத்தோடும் பெறுவதுடன், அவர்களின் குறைகளை தாமதமின்றி களைய நடவடிக்கை எடுக்கவும், 1992 ஆம் ஆண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. இக்காவல் நிலையங்களில் முற்றிலும்

பெண் காவல் பணியாளர்களே உள்ளனர். தற்போது மாநிலத்தில் 198 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. 2011–12 ஆம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டியிலும், விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டையிலும் புதியதாக இரண்டு மகளிர் காவல் நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. காவல் துறையில், டிசம்பர் 1995ல் தான் முதல்முறையாக பெண்களுக்கென்று 30 சதவீத இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, இத்துறையில் 10,138 பெண் காவல் பணியாளர் பணியிடங்கள் கீழ்க்கண்ட பதவிகளில் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ஆய்வாளர் | : | 196 |
| சார் ஆய்வாளர் | : | 1413 |
| தலைமைக் காவலர் | : | 589 |
| காவலர் | : | 7940 |

இவ்வாண்டில் 1891 பெண் காவலர்கள் நியமனம் செய்யப்படுவர். இதற்கான அறிவிக்கை 21.3.2012 அன்று வெளியிடப்பட்டுள்ளது. பெண் காவல் அதிரடிப்படை 4.10.2002 அன்று என்னால் துவக்கப்பட்டது. பெண் காவல் அதிரடிப்படையினர் இன்று வன்முறையாளர்களை எதிர்கொள்வதிலும் துப்பாக்கி சுடுவதிலும் ஆண் காவல் அதிரடிப்படையினருக்கு நிகராக விளங்குகின்றனர். ஆயுதப்படையைச் சார்ந்த பெண் காவலர்களின் வசதிக்காக

படைகுடியிருப்புக் கட்டுவதற்காக ரூ.5.66 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் சட்ட உரிமைகள் குறித்து அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவில் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெண் காவல் பணியாளர் ஒருவருடன், வருவாய் அலுவலர், வழக்கறிஞர், சுகாதாரப் பணியாளர் மற்றும் ஆசிரியர் அடங்கிய குழு ஒன்று ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தில் சென்று பெண்கள் தங்களின் சட்ட உரிமைகளை பாதுகாத்திட அச்சமின்றி காவல் நிலையத்தை அணுக வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

## <u>IX. காவல் துறையில் சிறப்புப் பிரிவுகள் :</u>

i) குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை :

குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை 1906 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. மிக முக்கியம் வாய்ந்தவை என்று கருதப்படும் குற்றங்களையும் மற்றும் மாநிலங்களுக்கிடையே தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வழக்குகளையும் இப்பிரிவு புலன் விசாரணை செய்து வருகிறது. திட்டமிட்ட குற்றங்களான கள்ள நோட்டு அச்சடித்தல், ஆட்கடத்தல் மற்றும் கணினிசார் குற்றங்களை

எதிர்கொள்ளும் வகையில் நிபுணத்துவம் பொருந்தியதாக இப்பிரிவு பரிணமித்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்துதலை தடுக்கும் நோக்குடனும் அக்குற்றத்தில் ஈடுபடுபவர்களை கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் 2002 ஆம் ஆண்டில், எனது அரசால் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை தலைமையகத்தில், ‘ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவு’ ஒன்று தொடங்கப்பட்டது. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையின் கீழ் தற்போது மாநிலம் முழுவதும் 40 ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளில் குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில், சுகாதாரத் துறையின் ஒத்துழைப்புடன் இப்பிரிவு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கணினிகள் மற்றும் கைபேசிகளைப் பயன்படுத்தி மற்றவரின் வங்கி கணக்கிலிருந்து பணத்தை சட்ட விரோதமாக பரிமாற்றம் செய்வது, ஆபாச படங்கள் மற்றும் தகவல்களை பரப்புவது போன்ற குற்றங்களை கையாளுவதற்கு ‘கணினி வழி குற்றப் பிரிவு’ ஒன்று 2002–ல் ஏற்படுத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் அடையாளத் திருட்டு சம்பந்தப்பட்ட 25 வழக்குகள், ஆபாசப்படங்கள் தொடர்பான 11 வழக்குகள், வேலை வாங்கித் தருவதாகக் கூறி முன்பணம் பெற்ற வகையில் 33 வழக்குகள், கணினி வழி பின் தொடர்தல்/

மன உளைச்சல் ஏற்படுத்துதல் தொடர்பான 8 வழக்குகள் மற்றும் 4 இதர வகை வழக்குகள் உட்பட மொத்தம் 81 வழக்குகளில், குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையின் கீழ் இயங்கும் கணினி வழி குற்றப் பிரிவு விசாரணை மேற்கொண்டது.

ii) குற்றப்பிரிவு :

குற்றப்பிரிவில் கீழ்க்கண்ட பிரிவுகள் அடங்கும்.

அ) சிறப்பு புலனாய்வுப் பிரிவு :

மத அடிப்படைவாத அமைப்புகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும் மற்றும் குற்ற வழக்குகளை வெற்றிகரமாக கையாளவும் இப்பிரிவு தொடங்கப்பட்டது. கோயம்புத்தூரில் 14.02.1998ல் நிகழ்ந்த தொடர்குண்டு வெடிப்புச் சம்பவம், இப்படிப்பட்ட குற்ற நிகழ்வுகளை விரிவாக விசாரிக்கவும், குற்றவாளிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவும், ஒரு வல்லுனர் பிரிவு தேவை என்பதை உணர்த்தியது. கோயம்புத்தூர் தொடர்குண்டு வெடிப்பு வழக்குகள் உட்பட புலனாய்வு செய்த அனைத்து வழக்குகளையும் இப்பிரிவு தீர்த்துள்ளது. இப்பிரிவானது இதுவரை 139 வழக்குகளில் புலன் விசாரணை மேற்கொண்டு, அவற்றில் 89 வழக்குகள் குற்றவாளிகளுக்கு தண்டனையில் முடிந்துள்ளன.

ஆ) போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவு :

போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின் நடமாட்டத்தை முற்றிலும் தடுப்பதற்காக 1985ம் ஆண்டு போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் இப்பிரிவு உருவாக்கப்பட்டது. தற்போது மாநிலம் முழுவதும் 15 அலகுகள் செயல்படுகின்றன. 2011 ஆம் ஆண்டில், 1,640 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 1,664 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். ரூ.5.59 கோடி மதிப்புள்ள போதைப் பொருட்கள், பறிமுதல் செய்யப்பட்டு, 20 குற்றவாளிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 966 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன.

இ) காணொளி திருட்டு தடுப்புப் பிரிவு :

காணொளி திருட்டைத் தடுப்பதற்கும், பதிப்புரிமை சட்டம் மீறப்படுவதை தடுப்பதற்கும் இந்த சிறப்புப் பிரிவு 17.02.1995 அன்று தொடங்கப்பட்டது. முதலில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 அலகுகள் தொடங்கப்பட்டன. பின்னர் 6.01.2005ல் சென்னை (இரண்டாவது பிரிவு), வேலூர், புனிதத் தோமையார் மலை, கடலூர், விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 6 அலகுகள் உருவாக்கப்பட்டன. 2011ம் ஆண்டில், 2,665 வழக்குகள் பதிவு

செய்யப்பட்டு, 2,648 எதிரிகள் கைது செய்யப்பட்டனர். ரூ.10.79 கோடி மதிப்பிலான குறுந்தகடுகள் / காணொளி குறுந்தகடுகள் பறிமுதல் செய்யப்பட்டன. 1,865 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன. 2011ம் ஆண்டில், காணொளி திருட்டு சம்பந்தமான குற்றங்களில் ஈடுபட்ட 14 நபர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஈ) கூட்டுக் கொள்ளை தடுப்புப் பிரிவு :

1995 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பிரிவிற்கு காவல் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமை வகித்து வருகிறார். இப்பிரிவானது கூட்டுக்கொள்ளை மற்றும் வங்கிக் கொள்ளைகளில் ஈடுபட எத்தனிக்கும் குற்றவாளிகள் மற்றும் அவர்களது நடவடிக்கைகள் குறித்த தகவல்களை சேகரிக்கிறது. இவை பிற காவல் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. உயர் நீதிமன்றம், அரசு மற்றும் காவல்துறைத் தலைமை இயக்குநர் ஆகியோரால் ஒப்படைக்கப்படும் முக்கியமான வழக்குகளையும் இப்பிரிவு புலன் விசாரணை செய்கிறது.

iii) பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு :

இப்பிரிவின் கீழ் மூன்று உட் பிரிவுகள் உள்ளன.

அ) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு :

கூட்டுறவுச் சங்கங்களில் பண மோசடி மற்றும் நிதி கையாடல்களை விசாரிப்பது இச்சிறப்புப் பிரிவின் பணியாகும். இப்பிரிவு ஒரு காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்கி வருகிறது. 2011 ஆம் ஆண்டில் 70 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, நிலுவையில் இருந்த வழக்குகள் உட்பட 81 வழக்குகளில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு நீதிமன்றங்களில் முடிக்கப்பட்ட 96 வழக்குகளில், 81 வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஆ) சிலை திருட்டு தடுப்புப் பிரிவு :

தொன்மை வாய்ந்த மற்றும் நூறு ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த சிலைகளின் திருட்டு போன்ற நிகழ்வுகளை இப்பிரிவு கவனிக்கின்றது. பல மாநிலங்கள் அல்லது வேறு நாடுகள் சம்பந்தமுடைய சிலை கடத்தல் வழக்குகளையும் அரசின் ஆணையோடு இப்பிரிவு விசாரணை செய்கிறது. 2011 ஆம் ஆண்டில், 6 சிலை திருட்டு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 16 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்த ரூ.80 லட்சம் பெறுமானமுள்ள தொன்மை வாய்ந்த 10 சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

குற்றவாளிகள் பிற நாடுகளுக்கு தப்பிச் சென்றாலும், அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியினையும் இப்பிரிவு செய்து வருகிறது. "இண்டர்போல்" மூலமாக அனுப்பப்பட்ட ஓர் அறிவிக்கையின் அடிப்படையில், தேடப்பட்டு வந்த குற்றவாளி ஒருவர், ஜெர்மனி நாட்டில் கைது செய்யப்பட்டார். அந்நாட்டிலிருந்து அவரை நம் நாட்டிற்குக் கொண்டு வர தேவையான நடவடிக்கையையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

இ) பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு–II :

பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு–II (நிதி நிறுவனங்கள்), முக்கியமாக வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட மோசடி மற்றும் பணம் திருப்பி செலுத்தாத வழக்குகள் குறித்து புலன் விசாரணை செய்து வருகிறது.

இப்பிரிவு தொடங்கப்பட்டதிலிருந்து, 12,50,242 நபர்கள் முதலீடு செய்திருந்த ரூ.2704 கோடி வைப்புத் தொகை சம்பந்தப்பட்ட 1505 வழக்குகளை கையாண்டுள்ளது. ரூ.1262 கோடி தொகையை உரிய முதலீட்டாளர்களுக்கு திருப்பியளித்துள்ளது. ரூ.1546 கோடி பெறுமானமுள்ள சொத்துக்களை ஜப்தி செய்துள்ளது.

2011 ஆம் ஆண்டில், 7 வழக்குகள் தண்டனையில் முடிந்து, உரிய முதலீட்டாளர்களுக்கு ரூ.51.46 கோடி திருப்பியளிக்கப்பட்டுள்ளது. மேலும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் பின்னர் முதலீட்டாளர்களுக்கு பணத்தை திருப்பியளிக்கும் வகையில் ரூ.9.95 கோடி பெறுமானமுள்ள சொத்துக்களை ஜப்தி செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அடிக்கடி நிதி நிறுவனங்களை ஆரம்பித்து பொது மக்களை மோசடி செய்வதை வழக்கமாக கொண்டிருந்த பிரபல குற்றவாளிகள் இருவர், குண்டர் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

iv) சிறப்புச் செயல்பாடுகள் பிரிவு :

காவல் பிரிவுகள் பன்முக பணிகளை செய்து வருகின்றன. இவ்வகைப் பணிகளுக்கு சிறப்புப் பயிற்சி அவசியமாகிறது. அப்பயிற்சிகளுள் ஒன்று அதிரடிப்படை பயிற்சி ஆகும். சிறப்புச் செயல்பாடுகள் பிரிவு இவ்வகையான பயிற்சிக்கு தகுதியான காவல் துறையினரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சிறப்பான பயிற்சி அளிக்கிறது. இப்பிரிவில் கீழ்க்கண்ட உட் பிரிவுகள் உள்ளன.

அ) தமிழ்நாடு அதிரடிப் படை :

பயங்கரவாத நிகழ்வுகளை அதிரடி நடவடிக்கைகள் மூலம் எதிர்கொள்ளும் சிறந்த பிரிவே தமிழ்நாடு அதிரடிப்

படையாகும். பொது அமைதிக்கு பங்கம் ஏற்படும் காலங்களில் அவசர கால நிலைமையை விரைந்து எதிர்கொள்ளும் குழுவாக (Quick Response Team) இப்பிரிவு செயல்படுகிறது. தேசிய பாதுகாப்புப் படையினருக்கு ஈடாக மாநிலத்தில் செயல்படும் பிரிவு இது. நவீன ஆயுதங்களைக் கையாளுதல், எந்தச் சூழ்நிலையிலும் தன்னுயிர் காத்துக் கொள்ளும் கலை, ஆயுதங்கள் இல்லாமல் எதிரிகளை ஒடுக்குதல், செங்குத்து பாறைகள் மீது ஏறுதல், வெடிகுண்டுகளை கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்தல், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் போன்ற பணிகளுக்கான பயிற்சிகள் இப்பிரிவினருக்குஅளிக்கப்படுகிறது.

ஆ) தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி :

இப்பள்ளி அதிரடிப்படை வீரருக்கு தேவையான அனைத்து பயிற்சிகளையும் ஆண் மற்றும் பெண் காவலர்களுக்கு வழங்குகிறது. இப்பள்ளியில் படைக்கலன்கள் மற்றும் தந்திர நடவடிக்கைகளுக்கான பயிற்சி, நவீன ஆயுதங்களை கையாளுதல், வெடிகுண்டுகளை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் நுணுக்கத்திற்குத் தேவையான பயிற்சி மற்றும் மறைந்திருந்து துப்பாக்கிச் சுடும் பயிற்சி, மோப்ப நாய்கள் மற்றும் அவற்றை கையாளுபவர்களுக்குரிய பயிற்சி மற்றும் இது தொடர்பான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டில் இப்பள்ளியில் 10,998 காவல் துறையினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இ) வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து, செயலிழக்கச் செய்யும் படை :

இது வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் ஒரு சிறப்புப் பிரிவாகும். மாநில காவல்துறையை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, அனுபவமுள்ள முன்னாள் ராணுவத்தினரும் இப்படைப் பிரிவில் பணியாற்றுகின்றனர். வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து, செயலிழக்கச் செய்யும் படைப் பிரிவு காவல் துறையினருக்கு பயிற்சி வகுப்புகளையும் நடத்துகிறது. 2011 ஆம் ஆண்டில் 11,600 காவல் துறையினர் பயிற்சி பெற்றுள்ளனர்.

மேலும், இப்பிரிவு சதிச்செயல்களுக்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடிப்பது குறித்த பயிற்சியினை இதர மாநில காவல் துறையினருக்கும் மற்றும் சுங்க இலாகா, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் போன்ற பிற துறைகளை சேர்ந்தவர்களுக்கும் வழங்கியுள்ளது.

2011–12ல் எனது அரசு இப்படைப் பிரிவிற்கு பயிற்சி அளிக்கும் விதமாக ரூ.30.78 லட்சம் செலவில் வெடிகுண்டு மாதிரி பயிற்சி அறை கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளது.

2011–12ல் இப்படையிலுள்ள முன்னாள் ராணுவத்தினர் 147 நபர்களுக்கு அதிரடிப்படை பயிற்சி பள்ளி வீரர்களுக்கு ஈடாக மாதம் ரூ.3000/– வீதம் இடர்ப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

v) நுண்ணறிவுப் பிரிவு :

நாட்டில் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள், பாதுகாப்புக்கும் பொது அமைதிக்கும் பங்கம் விளைவிக்கக் கூடிய சம்பவங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகியன தொடர்பான நுண் தகவல்களைச் சேகரித்து, ஒப்பீடு செய்து அரசின் உரிய அதிகாரிகளுக்கு அனுப்ப நுண்ணறிவுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவின் கீழ், கீழ்க்கண்ட பிரிவுகள் இயங்குகின்றன.

அ. தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

ஆ. 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

இ. பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

ஈ. சிறப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

உ. திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவுப் பிரிவு

அ) தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை :

ஒவ்வொரு மாவட்டத்திலும் / ஆணையர் அலுவலகத்திலும் ஆய்வாளர் ஒருவரின் தலைமையின் கீழ் இத்துறையின் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவானது,

மாநிலத்தில் மத வேறுபாடுகள் மற்றும் சாதிப் பிரச்சனைகளால் ஏற்படும் பதற்ற நிலை மற்றும் பிற சட்டம்–ஒழுங்கு பிரச்சனைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிக்கிறது. ஒப்பாய்வுக்குப் பின்னர் இத்தகவல்கள் உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கள அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகிறது. சட்டம்–ஒழுங்கு பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடிய தொழிலாளர், மாணவர், இளைஞர், விவசாயிகள், தொழிற்சங்கங்கள், பணிச் சங்கங்கள் போன்ற அமைப்பு சார் மற்றும் அமைப்பு சாரா பிரிவுகளின் நடவடிக்கைகளும் இப்பிரிவால் கண்காணிக்கப்படுகின்றன.

ஆ) 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை :

இப்பிரிவு மாநிலம் முழுவதும் செயல்படுகிறது. பல்வேறு போராளிகள், இடது சாரி தீவிரவாதிகள் ஆகியோரது நடவடிக்கைகளை கண்காணிப்பதையும், தீவிரவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை புலன் விசாரணை செய்வதையும் இப்பிரிவு மேற்கொள்கிறது.

இ) பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை :

பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மிக மிக முக்கிய நபர்கள் / மிக முக்கிய நபர்கள், மற்றும் வெளிநாட்டுத்

தலைவர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு பணிகளை கவனித்து வருகிறது. பயங்கரவாத மற்றும் தீவிரவாத குழுக்களின் அச்சுறுத்தல் உள்ள மிக முக்கிய நபர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் இப்பிரிவின் பணி மிக முக்கியம் வாய்ந்தது. இது தவிர வெளிநாட்டினர் தொடர்பான விஷயங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அமைப்புகள் தொடர்பான பணிகளை இப்பிரிவு கையாள்கிறது.

ஈ) சிறப்புப் பிரிவு :

கோவை தொடர் குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து மத அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணிக்க சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, இந்த சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. மத அடிப்படைவாதிகள் மற்றும் அவர்களது அமைப்புகளின் நடவடிக்கைகளை இப்பிரிவு கண்காணித்து வருகிறது.

உ) திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவு பிரிவு :

மாநில நுண்ணறிவு பிரிவில் இயங்கி வரும் 'திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவு பிரிவு', கொடுங் குற்றங்களில் ஈடுபடும் கும்பல்கள், ரவுடிகள், கூலிப்படையினர், போதைப் பொருள் கடத்துவோர், ஆயுதம் மற்றும் வெடி பொருட்கள் கடத்துவோர், ஆட்கடத்துவோர், ஹவாலா பணப்பரிவர்த்தனை,

கள்ள நோட்டு புழக்கத்தில் விடுதல், பண சலவை செய்தல் போன்ற திட்டமிட்ட குற்றங்களில் அமைப்புரீதியாக ஈடுபடுவோர்கள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட மாவட்டக் காவல்துறையினருக்கு அத்தகவலை அளித்து வருகிறார்கள். மேலும், இப்பிரிவினர் குற்றவாளிகள் குறித்த அனைத்து விவரங்களையும் சேகரித்து முழு விவரத் தொகுப்புகளை தயார் செய்கின்றனர்.

vi) தொழில்நுட்பப் பணிகள் :

காவல்துறையினரின் அன்றாட செயல்பாட்டிற்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு வசதிகளை செய்து தருவதுடன், இயற்கை சீற்றங்களின் போது அவசர தகவல் தொடர்புகளை ஏற்படுத்தி தருவது போன்ற பணிகளை இத்தொழில் நுட்பப் பணிகள் பிரிவு மேற்கொள்கிறது. (i) தொழில்நுட்பப் பிரிவு (ii) செயலாக்கப் பிரிவு என இரண்டு உட்பிரிவுகள் இப்பிரிவில் உள்ளன. தொழில்நுட்பப் பிரிவின் கீழ் 58 கள அலகுகளும், செயலாக்கப் பிரிவின் கீழ் 53 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன.

தொழில்நுட்பப் பிரிவில் 691 தொழில் நுட்பப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். நாட்டிலேயே அதிக தொழில் நுட்பப் பணியாளர்களைக் கொண்ட சிறப்பு தமிழ்நாட்டுக்கே

உரியது. <u>மேலும், இந்தியாவில் தமிழ்நாடு காவல்துறையில் மட்டுமே துறையின் பயன்பாட்டிற்கென நுண்ணலைத் தகவல் தொடர்பு வசதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.</u> இத்தகவல் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பானது முற்றிலும் காவல் துறையினரால் பராமரிக்கப்படுகிறது. ஒலி மற்றும் தரவு மாற்று வசதிகள் இதன் மூலம் வழங்கப்படுகிறது.

சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ரூ.132 லட்சம் செலவில், டெட்ரா அடிப்படையிலான நவீன கட்டுப்பாட்டு அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது போன்று, டெட்ரா நவீன கட்டுப்பாட்டு அறைகள் கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. மாநிலம் முழுவதும் காவல் பிரிவுகளுக்கென 500 அகண்ட அலை வசதி வழங்கும் திட்டம் 40 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து காவல் நிலையங்களுக்கும், காவல்துறையின் பிற முக்கிய அலகுகளுக்கும் அகண்ட அலைவரிசை இணைய வசதி ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில், ரூ.132 லட்சம் செலவில், காவல்நிலையங்கள் மற்றும் பிற காவல் அலுவலகங்களுக்கான தரவு இணைப்பு வசதியை கம்பியில்லா வானொலி மூலம் இணைக்கும் பணி சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

vii) சிறப்பு இலக்குப் படை :

இப்பிரிவு கொடுங்குற்றங்களைப் புரிந்தவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை கையாளுகிறது. இப்பிரிவில் ஆயுதம் ஏந்திய போராட்டம், உள்நாட்டுக் கலகம், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் ஆட்கடத்தல் போன்றவற்றைக் கையாளுவதில் பயிற்சி பெற்ற வீரர்கள் உள்ளனர். மேலும், இப்படை வீரர்கள் பெரிய அளவிலான இயற்கைச் சீற்றங்கள் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி செய்கின்றனர். வனப் பகுதிகளில் நக்சலைட்டு ஒழிப்பு நடவடிக்கைகளிலும் இப்படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

வன வளத்தை பாதுகாக்கும் நோக்குடன் இப்படைப் பிரிவு விலங்குகளை வேட்டையாடுபவர்களையும் கண்காணிக்கிறது. **2011** ஆம் ஆண்டு விலங்குகளை வேட்டையாடிய மற்றும் திருட்டுத்தனமாக மரங்களை வெட்டிய **93** நபர்களை சிறைபிடித்துள்ளனர். மேலும், கள்ளத்தனமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களையும் இப்பிரிவினர் வெற்றிகரமாக வெளிக்கொணர்ந்துள்ளனர்.

வனப் பகுதிகளில் செயலாற்றுவது குறித்து பயிற்சி அளிப்பதில் சிறப்பு இலக்குப் படையானது ஒரு முதன்மை பயிற்சி நிறுவனமாக விளங்குகிறது. **2011** ஆம் ஆண்டில், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை மற்றும்

வனத் துறை அலுவலர்கள் 2006 பேருக்கு, வனப் பகுதியில் பணிபுரிவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில், இப்படைப் பிரிவினர், 208 தேடுதல் நடவடிக்கைகளிலும், 52 பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

viii) சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் :

இப்பிரிவு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர்களுக்கு எதிராக நடக்கும் வன்கொடுமைகளை தடுப்பதையும் அவர்களது சட்டப் பூர்வ உரிமைகளை பாதுகாப்பதையும் கவனித்துக் கொள்கிறது. இப்பிரிவு கூடுதல் காவல்துறை இயக்குநர் (Additional Director General of Police) ஒருவரின் கீழ் இயங்கி வருகிறது. 30 காவல் மாவட்டங்களிலும், 6 காவல் ஆணையரகங்களிலும் 36 அலகுகள் (Units) அவரது கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

630 வழக்குகள் புலன் விசாரணையிலும் சுமார் 3,050 வழக்குகள் நீதிமன்ற விசாரணையிலும் உள்ளன. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென தனியே 4 சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பிற இடங்களில் அமர்வு

நீதிமன்றங்கள் இவ்வழக்குகளின் விசாரணையை மேற்கொள்கின்றன.

வன்கொடுமையினால் பாதிக்கப்படக் கூடிய கிராமங்களை கண்டறியும் ஆய்வை இப்பிரிவினர் நடத்துவதால் பட்டியலினத்தவர் / பழங்குடியினருக்கு எதிரான (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டத்தின் கீழ் நிகழக் கூடிய குற்றங்களை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எளிதாக உள்ளது. மேலும், பெரிய அளவில் விழிப்புணர்வு முகாம்களும் இப்பிரிவால் நடத்தப்படுகின்றன.

வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு மாவட்ட ஆட்சியர்கள் நிதி நிவாரணம் அளிப்பது குறித்தும் இப்பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

ix) காவலர் பயிற்சி :

காவலர் பயிற்சிப் பிரிவின் கீழ் காவலர் உயர் பயிற்சியகம், காவலர் பயிற்சிக் கல்லூரி, காவலர் தேர்வு பள்ளிகள் மற்றும் பணியிடைப் பயிற்சி மையங்கள் ஆகியவை இயங்கி வருகின்றன. காவலர் உயர் பயிற்சியகமானது வண்டலூர் ஊனமாஞ்சேரியில் அமைப்பதற்கு 12.10.2004 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.1199ல் என்னால்

ஆணையிடப்பட்டது. இப்பயிற்சியகத்தில் உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கான பணி முன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் / காவலர் பயிற்சி கல்லூரி ஆகியவற்றில் உதவி ஆய்வாளர் பதவி நிலையில் உள்ள 1,061 பேருக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் வெற்றிகரமாக தங்கள் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர். 15.02.2012 அன்று நடைபெற்ற பயிற்சி நிறை அணி வகுப்பில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு மிக அதிகமான எண்ணிக்கையில் உதவி ஆய்வாளர்கள் பயிற்சியை நிறைவு செய்தனர்.

காவலர் பயிற்சி கல்லூரியானது இரண்டாம் நிலை காவலருக்கான பயிற்சியை நடத்துகிறது. பணியில் சேர்க்கப்பட்ட 8,488 காவலர்களுக்கு, 4 நிரந்தர காவலர் பயிற்சி பள்ளிகளிலும் மற்றும் 30 தற்காலிக காவலர் பயிற்சி பள்ளிகளிலும் அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டது. இரண்டாம் நிலை காவலர்களுக்கு காவல் பயிற்சிப் பள்ளியில் 22 வாரங்களுக்கு மட்டுமே அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. விரிவான பயிற்சி திட்டத்திற்கு குறைந்தது 7 மாத கால அளவு அடிப்படை பயிற்சியும், 1 மாத கால செய்முறை பயிற்சியும் தேவைப்படுவதால் பயிற்சிக்காலத்தை நீட்டித்து 07.03.2012ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

காவல் துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு பல்வேறு தொழில் சார் திறன் குறித்த பயிற்சி மாநிலம் முழுவதுமுள்ள 13 பணியிடை பயிற்சி மையங்களில் அளிக்கப்பட்டு வருகிறது.

x) தமிழ்நாடு சிறப்பு காவல்படை அணிகள் :

தமிழ்நாடு சிறப்பு காவல் படையில், ஆவடியில் உள்ள படைக்கல மையம் (ஆயுதப்படை காவல் பயிற்சி மையம்) உள்பட, 16 சிறப்பு காவல் படை அணிகள் உள்ளன. பேரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை எதிர்கொள்ளும் பணிக்காக ஒரு தனிச் சிறப்பு காவல் படை உருவாக்கப்பட்டுள்ளது. ஆவடியில் உள்ள படைக்கல மையம், தமிழ்நாடு சிறப்பு காவல் படை வீரர்களுக்கென சிறப்புப் பயிற்சி அளித்து வருகிறது. 2011 ஆம் ஆண்டில் 1,382 காவல் துறையினர் இங்கு பயிற்சி பெற்றுள்ளனர்.

தேர்தல் பணி மற்றும் சட்டம் ஒழுங்கிற்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பெரிய அளவிலான சம்பவங்களிலும் தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர், ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்களது பணி பிற மாநிலங்களின் தேவைக்கேற்ப அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அம்மாநிலங்களில் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

இப்பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் இரண்டு மோட்டார் வாகனப் பராமரிப்பு பணிமனைகள் ஆவடி மற்றும் திருச்சியில் இயங்கி வருகின்றன. இவ்விரண்டு பணிமனைகளிலும், காவல் துறையினரின் வாகனங்களுக்கு பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் காவல் வாத்திய இசைக்குழுவில் பணியாற்றுவதற்கான நபர்களை தேர்வு செய்தல் மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை தமிழ்நாடு சிறப்பு காவல்படை கவனித்து வருகிறது.

xi) கடலோர காவல் படை :

தமிழகத்தில் 1,076 கீ.மீ கடலோர எல்லையில் 13 கடலோர மாவட்டங்களில், 591 மீனவ கிராமங்கள் உள்ளன. இந்தப் பிரிவு கடலோரப் பாதுகாப்பை நிறைவு செய்கிறது. எரிபொருள், மருந்து பொருட்கள், பிற அத்தியாவசிய பொருட்கள் கடத்துதல் மற்றும் தமிழ்நாட்டிற்குள் சமூக விரோதிகள் கடல் வழியே ஊடுருவலை கண்டுபிடித்து தடுக்கும் நோக்குடன் 1994 ஆம் ஆண்டில் எனது ஆணையின்படி இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவில் 6 மண்டலங்கள் சென்னை, நாகப்பட்டினம், வேதாரண்யம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ளன. கடலோர காவல் படை கடலில் 5 கடல் மைல்கள் வரையிலும், கடலோரத்திலும் ரோந்து பணியை

மேற்கொள்கிறது. இப்படையினர் உள்ளூர் காவல் துறையினருடன் இணைந்து செயல்படுகின்றனர்.

தற்போது 12 டன் திறன் கொண்ட 12 படகுகளும், 5 டன் கொள்ளளவு கொண்ட 12 படகுகளும் கடலோர பாதுகாப்புப் படையில் உள்ளன.

மேலும், காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் கடலோரக் காவல் படைக்கென கூடுதலாக, 8 உப்பல் படகுகளும் மற்றும் 6 ஜெமினி படகுகளும் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கடலோர எல்லைப் பகுதிகளில் ரோந்துப் பணிகளை மேற்கொள்வதற்கென 12 அனைத்துப் பகுதிகளிலும் செல்லக்கூடிய ஜீப்புகள் மற்றும் 12 மோட்டார் சைக்கிள்கள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 30 கடல் சார் காவல் நிலையங்கள் அமைத்திடவும், 20 படகுகள் வாங்குவதற்கும், 12 சரக்கு இறக்கும் இடங்கள் அமைத்திடவும், 30 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 60 இரு சக்கர வாகனங்கள் வாங்கிடவும் சமீபத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 30 கடல் சார் காவல் நிலையங்களுக்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டும் பணி விரைவில் தொடங்க உள்ளது.

ஆபத்தில் சிக்கிய மீனவர்களுக்கு உதவுவதற்காக கட்டணமில்லா தொலைபேசி எண்.1093 செயல்பட்டு வருகிறது. இது குறித்து 591 மீனவ கிராமங்களிலும்

விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டணமில்லா தொலைபேசி எண்.1093 மூலம் பெறப்பட்ட தகவல்களின் பேரில் 2011 ஆம் ஆண்டு 41 படகுகள் மீட்கப்பட்டு, 181 மீனவர்கள் ஆபத்திலிருந்து கடலோரக் காவல் படையினரால் காப்பற்றப்பட்டுள்ளனர். அதே போன்று 2012 ஆம் ஆண்டு 3 படகுகளும், 8 மீனவர்களும் காப்பற்றப்பட்டுள்ளனர்.

கடலோரக் காவல் படையானது கடல் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து காலமுறையிலான கடற்பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் "ஆபரேஷன் ஹம்லா–I" என்ற பாதுகாப்பு ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது. அதே போல் தீவிரவாதிகள் கடல் வழியே ஊடுருவுவதை தடுப்பதில் கடலோர காவல் படை, கடல் பாதுகாப்புப் படை மற்றும் உள்ளூர் காவல் துறையினர் ஆகியோர் இணைந்து செயல்படும் திறமையினை பரிசோதிக்கும் வகையிலும், திறமையை வெளிப்படுத்தும் வகையிலும், 28.03.2012 மற்றும் 29.03.2012 ஆகிய இரு நாட்களில் "ஹம்லா–II" என்ற பயங்கரவாத தடுப்பு ஒத்திகை பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

xii) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு :

கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் சட்ட விரோதமாக மதுபானம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு

மதுபானங்களை எடுத்துச் செல்லுதல், இருப்பில் வைத்திருத்தல், விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளை தடுக்கும் பணிகளுக்காக இப்பிரிவு அமைக்கப்பட்டது. மாநிலத்தில் 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2011ஆம் ஆண்டில் இப்பிரிவால் 1,01,486 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,00,930 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களில் 221 நபர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர்.

xiii) ரயில்வே காவல் படை :

இம்மாநிலத்தில் ரயில் பாதையானது 5,525 கி.மீ நீளம் உள்ளது. ரயில்களிலும், ரயில் நிலையங்களிலும் குற்றங்கள் நிகழாமல் தடுப்பதையும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதையும், பயணம் செய்யும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்குடனும் இப்பிரிவு துவக்கப்பட்டது. இப்பிரிவில் 37 ரயில்வே காவல் நிலையங்களும், 20 ரயில்வே புறக்காவல் நிலையங்களும் உள்ளன.

ரயில்வே காவல் படையினரால் 2011 ஆம் ஆண்டில், 353 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ.62.40 லட்சம் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. ரயில் நிலைய வளாகங்கள்

மற்றும் ரயில்களில் அனாதையாக விடப்பட்ட 42 சிறுமிகள் உள்ளிட்ட மொத்தம் 420 இளஞ்சிறார்கள் மீட்கப்பட்டனர்.

xiv) மோப்ப நாய் படைப்பிரிவு :

குற்ற வழக்குகளில் பயிற்சி அளிக்கப்பட்ட மோப்ப நாய்களின் மூலம் தடயங்களை கண்டறிய காவல்துறையினருக்கு இப்பிரிவு உதவுகிறது. குற்றம் நடந்த இடத்தை நன்கு முகர்ந்து அந்த மோப்பத்தை பயன்படுத்தி குற்றவாளிகளை பிடிக்க மோப்ப நாய்கள் உதவுகின்றன. அதே போன்று வெடிமருந்துகள் மற்றும் போதைப்பொருட்கள் ஆகியவற்றை கண்டுபிடிக்கவும் மோப்ப நாய்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும், ஆணையரகங்கள் மற்றும் சிறப்பு இலக்குப்படை, ரயில்வே காவல்படை, அதிரடிப்படை ஆகிய சிறப்பு பிரிவுகளிலும் தமிழ்நாடு காவல்துறையின் மோப்ப நாய்ப் படை பிரிவுகள் உள்ளன. மாநிலத்தில் இப்பிரிவில் மொத்தம் 191 மோப்ப நாய்கள் உள்ளன. அவற்றில் 80 மோப்ப நாய்கள் குற்றவாளிகளை கண்டறியவும், 107 மோப்ப நாய்கள் வெடிமருந்துகளை கண்டுபிடிக்கும் பணியிலும், 4 மோப்ப நாய்கள் போதைப் பொருட்களை கண்டுபிடிக்கும் பணியிலும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இந்த மோப்ப நாய்களுக்கு நாள் ஒன்றுக்கு உணவு கட்டணமாக ரூ.54/– என இருந்ததை ரூ.85/– ஆகவும், இவைகளின் பராமரிப்புக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.250/– ஆக இருந்ததை ரூ.300/– ஆகவும் உயர்த்தி எனது அரசு வழங்கி வருகிறது.

xv) குதிரைப்படைப்பிரிவு :

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் உள்ள இப்பிரிவு, பண்டிகைகள், ஊர்வலங்கள், பெரிய விளையாட்டுப் போட்டிகள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும், குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினம் போன்ற நிகழ்ச்சிகளின் போதும் கூட்டங்களை கட்டுப்படுத்தவும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறது.

தற்போது இப்படையில் 38 குதிரைகள் உள்ளன. குதிரைப் படைகளின் பணிகளை மாநகர ஆணையர்கள் மேற்பார்வை செய்கின்றனர்.

xvi) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் :

காவல் துறைக்கு தேவையான காவலர்களையும், அலுவலர்களையும் தேர்ந்தெடுக்கும் சவாலான பணியினை இவ்வாரியம் மேற்கொண்டு வருகிறது. 29.11.1991ல் தோற்றுவிக்கப்பட்ட ‘‘தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு

வாரியம்'' கீழ்கண்ட பதவிகளுக்கான பணியாளர்களை தேர்வு செய்கிறது.

அ) காவல் உதவி ஆய்வாளர்.

ஆ) காவல் உதவி ஆய்வாளர் (தொழில்நுட்பம்)

இ) இரண்டாம் நிலை காவலர்கள்

ஈ) இரண்டாம் நிலை சிறை காவலர்கள்.

உ) தீயணைப்புப் பணியாளர்கள்.

இதுவரை இவ்வாரியம் 67,686 இரண்டாம் நிலைக் காவலர்கள், 2,054 இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள், 3,750 தீயணைப்போர், 5,099 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 391 தொழில் நுட்பக் காவல் உதவி ஆய்வாளர்களை தேர்வு செய்துள்ளது.

இரண்டாம் நிலை காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்போர் முதலிய 13,320 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிக்கை 21.03.2012 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

xvii) ஊர்க்காவல் படை :

இப்பிரிவு 1963 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதிகளின்படி, 1963 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், வெள்ளம், தீ விபத்து, புயல் போன்ற அவசர கால நிகழ்வுகளை

சமாளிப்பதற்கும் தன்னார்வ குடிமக்களை ஈடுபடுத்தி அமைக்கப்பட்ட ஒரு பிரிவாகும். போக்குவரத்தை சீர்படுத்துதல், கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்துவது, மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவுது, உடல் ஆரோக்கியம், சுகாதாரம், சாலை பாதுகாப்பு முதலியன பற்றி, விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற பணிகளில் ஊர்க்காவல் படை உறுதுணையாக உள்ளது.

இன்றைய நிலவரப்படி மொத்தம் 105½ ஊர்க்காவல் படை அணிகளில் 2,750 மகளிர் உள்பட 11,622 ஊர்க்காவல் படையினர் உள்ளனர். அனைத்து மாவட்டங்கள் மற்றும் காவல் ஆணையரகங்கள் ஆகியவற்றில் மகளிர் பிரிவு உள்ளிட்ட ஊர்க்காவல் படையின் அலகுகள் உள்ளன. இந்தப் படையினருக்கு புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் சிறப்பான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்துள்ளது. ஊர்க்காவலரின் தினப்படியானது ரூ.65/–யிலிருந்து ரூ.150/– ஆக 16.9.2011 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது. சென்னை மாநகரத்தில் இரவு பணிக்கான படி ரூ.200/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மாநிலத்தில் ஊர்க்காவல் படையினரின் பதிவெண்ணிக்கையை 11,622–லிருந்து 16,000–ஆக உயர்த்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

xviii) மாநில குற்ற ஆவணக் காப்பகம் :

காவல் துறையினரின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், குற்ற ஆவணக் காப்பக முறையை மேம்படுத்தவும் மாநில குற்ற ஆவணக் காப்பகம் ஏற்படுத்தப்பட்டது. இதில் காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுக் கூடம், குற்றச் செயல்முறைப் பிரிவு மற்றும் புள்ளிவிவரம் திரட்டும் பிரிவு ஆகிய உட் பிரிவுகள் செயல்படுகின்றன.

அ) காவல் கணினிப் பிரிவு :

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் சம்பந்தமான அனைத்து விவரங்களை கணினி மயமாக்கி புலன் விசாரணைக்கு உதவிடும் வகையிலும், குற்ற நிகழ்வு புள்ளி விவரங்களை சேகரிக்கும் பொருட்டும் காவல் கணினிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

கணினி வழி நிழற்படம் உருவாக்கும் மென்பொருள் (Portrait Building System) மூலமாக 2011–ஆம் ஆண்டில் 51 நிழற்படங்கள் காவல் கணினி மையத்தால் உருவாக்கப்பட்டது. இதுவரை, மொத்தம் 853 நிழற்படங்கள் உருவாக்கப்பட்டதில், 142 நிழற்படங்கள் குற்றவாளிகளின் உருவத்தோடு ஒத்துப்போனதையடுத்து, குற்றவாளிகளை கண்டுபிடிக்க அவை மிகவும் பயனுள்ளதாக அமைந்தன.

இப்பிரிவு தமிழ்நாடு காவல் வலை தளத்தையும் பராமரிக்கிறது. இவ்வலை தளம் மூலம் பொதுமக்கள் புகார்களை பதிவு செய்ய இயலும். 2011 ஆம் ஆண்டில் 6,178 புகார்கள் வலை தளம் மூலம் பெறப்பட்டன. இத்தகைய புகார்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் / மாநகர காவல் ஆணையர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து புகார்தாரர்களுக்கு சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேற்படி வலை தளத்தின் மூலம் பொது மக்களுக்கான செய்திகள் மற்றும் காணாமல் போன நபர்கள் மற்றும் அடையாளம் தெரியாத பிரேதங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய தகவல்கள் இந்த இணையதளத்தில் உள்ளன.

களவுபோன மற்றும் மீட்கப்பட்ட வாகனங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய தரவு வங்கியாக மோட்டார் வாகன ஒருங்கிணைப்பு முறை (MVCS) விளங்குகிறது. ஒருவர் பழைய வாகனத்தை வாங்கும் போது அது களவுபோன வாகனமா அல்லது ஏதாவது குற்ற நிகழ்வில் சம்மந்தப்பட்ட வாகனமா என தெரிந்துகொள்ள, சென்னை மாநகர காவல் குற்ற ஆவண காப்பகத்தில், ஒரு தகவல் மையம் தொடங்கப்பட்டுள்ளது. இத்தரவுத் தளத்தில் அனைத்து மாநிலங்களிலிருந்தும் பெறப்பட்ட 8 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்கள் உள்ளன.

ஆ) விரல் ரேகைப் பிரிவு :

**1895** ஆம் ஆண்டில், சென்னையில், தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம் நிறுவப்பட்டது. இது நாட்டிலேயே மிகப் பழமை வாய்ந்ததாகும். தண்டனை பெற்ற அனைத்து குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகள் அடங்கிய சேமிப்புக் கிடங்காக இக்கூடம் விளங்குகிறது. இக்கூடத்தில் **1,62,291** தண்டனை பெற்ற நபர்களின் விரல் ரேகை பதிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதன்முறையாக அனைத்து மாவட்ட தலைமையிடங்கள் / ஆணையரகங்களில் ''ஓர் விரல் ரேகைப் பதிவுக் கூடம்'' அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் மொத்தம் **35** ''ஓர் விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள்'' இயங்கி வருகின்றன. மேலும், ''ஓர் விரல் ரேகைப் பதிவுக் கூடம்'' ஒன்று கூடுதலாக சென்னையிலுள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் செயல்பட்டு வருகிறது. அதே போல் மற்றொன்று சென்னை, வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் இயங்கி வருகிறது.

**2011** ஆம் ஆண்டில், விரல் ரேகைகளின் மூலமாக, **530** குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விரல் ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையினையும் (FACTS-Finger Print Analysis and Criminal Tracing System) விரல் ரேகை

பிரிவானது செயல்படுத்தி வருகிறது. சம்பவ இடத்தில் காணப்படும் குற்றவாளியின் விரல் ரேகையை கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ள விரல் ரேகை தரவு தளத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க இது உதவுகிறது.

2011 ஆம் ஆண்டில், விரல் ரேகை பதிவுகள் மூலம் அடையாளம் காணப்பட்ட வழக்குகளில் மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.12/– கோடியாகும்.

இ) குற்றச் செயல் வகையைக் கண்டறியும் பிரிவு :

இப்பிரிவு குற்ற நிகழ்வுகள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களை சேகரித்து, அவற்றை புலன் விசாரணை அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிக்கிறது. காணாமல் போன நபர்கள் பற்றிய விவரங்களையும் இப்பிரிவு சேகரிக்கிறது. மேலும், இப்பிரிவு குற்ற நுண்ணறிவு அரசிதழ் தயார் செய்து, அவற்றை அனைத்து காவல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கிறது.

ஈ) புள்ளி விவரம் திரட்டும் பிரிவு :

காவல் துறை சம்பந்தமான பொது புள்ளி விவரங்களை இப்பிரிவு சேகரித்து வருகிறது.

அகில இந்திய திட்டமான, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலை பின்னல் திட்டத்தை

(CCTNS - Crime and Criminals Tracking Network System) செயல்படுத்தும் பொறுப்பை மாநில குற்ற ஆவணக் காப்பகம் மேற்கொண்டு வருகிறது. திட்ட ஒருங்கிணைப்பாளர் (System Integrator) ஒப்பந்தப் புள்ளி மூலம் தெரிவு செய்யப்பட்டு, 30.09.2011 அன்று அதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இத்திட்டத்திற்காக, மத்திய அரசு தமிழ் நாடு அரசுக்கு ரூ.103.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகை பல கட்டங்களாக வழங்கப்படும். மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ், மாநிலத்தில் உள்ள சிறப்பு பிரிவுகள் இடம் பெறாததால் அப்பிரிவுகளிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்துடன், மாநில அரசு கூடுதலாக ரூ.9.9 கோடி வழங்குகிறது. இந்த திட்டத்திற்கான செயல் திறனை மேம்படுத்துவதற்கென 49 பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, இதுவரையில் 32,000–க்கும் அதிகமான காவல் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. CIPRUS என்று அழைக்கப்படும் அடிப்படை செயல் மென்பொருளை உருவாக்கும் பணி, தேசிய தகவல் மையத்திடம் (National Informatics Centre) ஒப்படைக்கப்பட்டுள்ளது. CCTNS திட்டமானது

பொதுமக்களுக்கு பல சேவைகளை அளிக்கும் மையமாகவும் செயல்படும்.

திருவள்ளூர், அரியலூர், கோயம்புத்தூர் நகரம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் முதல் கட்டமாக சோதனை முறையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பின்னர், இதர மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

கையால் எழுதப்பட்ட படிவங்களாக, பராமரிக்கப்பட்ட தரவுகளை, லக்கமாக்க (digitization) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>X. வாகன வசதி :</u>**

காவல் துறையின் திறமைகளை, அவர்களுக்கு வழங்கப்படும் வாகன வசதி பெரிதும் நிர்ணயிக்கின்றது. வேகமாக செல்லும் வாகனங்களை பயன்படுத்தி குற்றவாளிகள் குற்றங்களை செய்து விட்டு தப்பிவிட முனையும் போது அவர்களை விட வேகமாக செல்லக்கூடிய வாகனங்கள் காவல் படைக்கு தேவையானதாகும். இதனை மனதில் வைத்து நான் 2001–02 ஆம் ஆண்டில் காவல் துறைக்கு 1,794 வாகனங்கள் வழங்குவதற்கு ஆணையிட்டேன். இதுவே, எந்த ஒரு ஆண்டிலும் காவல் துறைக்கு வழங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையில் அதிகமானது ஆகும். காவல் துறையில் மொத்தம்

13,663 வாகனங்கள் உள்ளன. ரோந்துப் பணிகளை அதிகப்படுத்தியும், நெடுஞ்சாலைகளில் காவலர்களின் பணிகள் தென்படும் வகையிலும் இந்த வாகனங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நான் அறிவுறுத்தியுள்ளேன். கடந்த 11 மாதங்களில் துறைக்கு 560 வாகனங்கள் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## XI. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள் :

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம், பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற காவலர்களுக்கு ‘‘உங்கள் சொந்த இல்லம்’’ திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி தரும் நோக்கத்துடன், இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956ன்படி 1981–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. காவல் துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு வாடகை குடியிருப்புகளும், இந்தத் துறைகளுக்கு அலுவலக கட்டடங்களும் இந்நிறுவனம் கட்டி வழங்குகின்றது.

i) காவல்துறை குடியிருப்புகள் :

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரியம் 1992ம் ஆண்டு முதல், ஆண்டிற்கு 1000 குடியிருப்புகள் கட்டத் தொடங்கியது. பின் பல்வேறு நிலைகளில் ஆண்டுதோறும் காவலர் குடியிருப்புகள் கட்டும் இலக்கு படிப்படியாக 4000 ஆக

உயர்ந்து, இது பின்னர் குறைந்து, 2007–2008ம் ஆண்டு முதல் 2010–2011 ஆம் ஆண்டு முடிய ஆண்டு தோறும் 2000 குடியிருப்புகள் மட்டுமே கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அவசரக் காலங்களில் விரைந்து செயல்பட, காவலர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு அருகிலேயே குடியிருப்புகள் இருப்பது அவசியம். எனவே, காவலர்களுக்கான குடியிருப்பு வசதியில் 100 சதவீத தேவையையும் நிறைவு செய்ய இந்த அரசு முடிவு செய்தது. இதனை நான் கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் 24.08.2011ல் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின் போது அறிவித்தேன். அரசாணை (நிலை) எண்.851, உள் (காவல்–10) துறை, நாள்.13.12.2011ல் இதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 2011–12ம் ஆண்டில் 3,440 குடியிருப்புகள் ரூ.287.95 கோடி மதிப்பீட்டில் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டு வரவு செலவு திட்ட உரையில் 4340 குடியிருப்புகள் ரூ.400 கோடி செலவில் கட்டப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. காவலர்களுக்கான குடியிருப்புகள் எண்ணிக்கையை அதிகரிப்பது வரும் ஆண்டுகளிலும் தொடரும்.

ii) காவல்துறை கட்டடங்கள் :

இந்த அரசு பதவியேற்ற போது **190** காவல் நிலையங்கள் தனியார் வாடகை கட்டடங்களில் இயங்குவதை அறிந்து, **10.09.2011** அன்று **11** காவல் நிலையங்களுக்கு ரூ.**4.11** கோடி செலவில் கட்டடங்கள் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பின்னர் **15.11.2011**ல் மேலும் **11** காவல் நிலையங்களுக்கு ரூ.**5.14** கோடி செலவில் கட்டடங்கள் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் **2011–2012**–ல் ரூ.**9.25** கோடி செலவில் **22** காவல் நிலையங்கள் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், **97** காவல் நிலையங்கள் பழமையான மற்றும் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வந்தது கண்டறியப்பட்டது. பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வந்த **82** காவல் நிலையங்களுக்கு ரூ.**37.70** கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்ட இந்த அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

ஆக மொத்தம் கடந்த நிதியாண்டில் **104** காவல் நிலையங்கள் கட்ட ரூ.**46.95** கோடி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

**2011 – 2012** ஆம் ஆண்டில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இதர முக்கிய காவல்துறை கட்டடங்களில் கீழ்க்கண்டவைகள் அடங்கும்.

அ) நாகப்பட்டினம், அரியலூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ரூ.12.82 கோடி செலவில் ஆயுதப்படை வளாகங்கள்.

ஆ) திருவண்ணாமலையில் ஆயுதப்படையினருக்கு ரூ.11.33 கோடி செலவில் படைக் குடியிருப்புகள்.

இ) கமாண்டோ பயிற்சி பெறும் காவலர்களுக்கு, பள்ளிப்பட்டு, வல்லநாடு, சத்தியமங்கலம், திருச்சிராப்பள்ளி மற்றும் ஒத்திவாக்கம் ஆகிய இடங்களில் ரூ.8.53 கோடி செலவில் படைக் குடியிருப்புகள்.

ஈ) தஞ்சாவூரில் ரூ.4.81 கோடி செலவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம்.

உ) திருவண்ணாமலையில் ரூ.1.74 கோடி செலவில் விருந்தினர் மாளிகை.

ஊ) ரூ.3.82 கோடி செலவில் இதர காவல்துறை கட்டடங்கள்.

ஆக 2011–2012ல் காவல் துறையினருக்கான குடியிருப்புகள் மற்றும் பிற கட்டடங்களுக்கென ரூ.377.95 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

iii) திருப்பூர் மாநகர காவல் ஆணையரகம் :

திருப்பூர் நகரம் வளர்ந்து வரும் நகரமாகும். இந்நகரில் 8.7 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். பின்னலாடை ஏற்றுமதித் தொழிலில் ஈடுபடும் பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் சாயப் பட்டறைகள் அதிக எண்ணிக்கையில் இயங்குவதால், பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலிருந்து வரும் தொழிலாளர்கள் பெருமளவில் இங்கு தங்கி பணிபுரிந்து வருகின்றனர்.

திருப்பூர் நகரின் பொருளாதார முக்கியத்துவம், மற்றும் இடம் பெயரும் மக்கள் தொகை ஆகியவற்றை கருதி திருப்பூரில் புதிய மாநகர காவல் ஆணையரகம் உருவாக்கப்படுமென **14.11.2011**ல் நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நான் அறிவித்தேன். அதன்படி ஆணையரகத்திற்கு தேவையான காவல் பணியிடங்கள் முடிவு செய்யப்பட்டு வெகு விரைவில் திருப்பூர் காவல் ஆணையரகம் தொடங்கப்படும்.

iv) புதிய காவல் நிலையங்கள் :

அ) சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்கள் :

கோயம்பேடு, தரமணி மற்றும் கானாத்தூர் ஆகிய இடங்களில் மூன்று புதிய காவல் நிலையங்கள்

ரூபாய் 11.39 கோடி செலவில் சென்னையில் உருவாக்க 2011–2012ல்ஆணையிடப்பட்டுள்ளது.

ஆ) போக்குவரத்து காவல் நிலையங்கள் :

நகரமயமாதல் மற்றும் பெருகி வரும் வாகனப் போக்குவரத்துகள் ஆகியவற்றால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கையாளுவது போக்குவரத்து காவல் துறைக்கு ஒரு சவாலான பணியாகும். சென்னை மாநகரில் வளசரவாக்கம் மற்றும் செம்மஞ்சேரி உட்பட பன்னிரெண்டு இடங்களில் புதிய போக்குவரத்து காவல் நிலையங்கள் ஏற்படுத்த இவ்வரசு ஆணையிட்டுள்ளது. மேலும், சென்னை போக்குவரத்து காவல் பணிக்கென 1125 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்து இவ்வரசு 21.10.2011ல் ஆணையிட்டுள்ளது. இப்புதிய காவல் நிலையங்கள் மற்றும் கூடுதல் பணியிடங்களுக்கான செலவினம் ரூ.40 கோடியாகும்.

இ) புறக்காவல் நிலையங்கள் :

தமிழ்நாட்டில் 59 புறக்காவல் நிலையங்கள் ஜுன் 2011ல் செயல்பட்டு வந்தன. புறக்காவல் நிலையங்களை ஐந்து ஆண்டுகளுக்குள் முழு நேர காவல் நிலையங்களாக தரம் உயர்த்த இவ்வரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

இதனடிப்படையில் 2011–2012ல் 12 புறக்காவல் நிலையங்கள் ரூ.13.03 கோடி செலவில் முழு அளவு காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

ஈ) காவல்துறை அலுவலகங்களுக்கு 1000 புதிய கணினிகள் :

காவல் துறை நிர்வாகத்தினை நவீனப்படுத்தவும், மின்னாளுமையை மேம்படுத்தவும், 14.11.2011 அன்று நடைபெற்ற காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில், பல்வேறு நிலைகளில் செயல்படும் அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக 1000 புதிய கணினிகள் வழங்கப்படும் என நான் அறிவித்தேன். அதனடிப்படையில் ரூபாய் 5 கோடி அனுமதிக்கப்பட்டு, இக்கணினிகள், கோட்ட, மாவட்ட, சரக, மண்டல அளவிலான அலுவலகங்கள், சிறப்பு பிரிவுகள் மற்றும் காவல்துறை தலைமையகத்தில் நிறுவ ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## XII. தடய அறிவியல் துறை :

i) துறையின் தோற்றம் :

தமிழ் நாடு தடய அறிவியல் துறையானது 1849ல் “ரசாயன பரிசோதகரின் ஆய்வகம்” என்ற பெயரில் தொடங்கப்பட்டு இயங்கி வந்தது. மருத்துவத் துறையின் கீழ் இயங்கி வந்த இந்த ஆய்வகம், 1886ல் ஆரம்பிக்கப்பட்ட மதுவிலக்கு கலால் ஆய்வகம் மற்றும் 1905ல் காவல் துறையின்

கீழ் செயல்பட்டு வந்த அறிவியல் ஆய்வு தொடர்பான பிரிவு ஆகியவைகளை ஒருங்கிணைத்து 1959 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில தடய அறிவியல் ஆய்வகம் என நிறுவப்பட்டது. 1984 ஆம் ஆண்டு இந்த ஆய்வகம் "தடய அறிவியல் துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. குற்றவியல் நீதி பரிபாலனத்திற்காக தடய அறிவியல் சேவை புரிவதே இத்துறையின் முதன்மையான குறிக்கோளாகும்.

ii) துறையின் அமைப்பு :

இத்துறையானது மானுடவியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், கணினி தடயவியல், மரபணு ஆய்வு, ஆவண ஆய்வு, கலால், வெடிபொருள் ஆய்வு, போதைப்பொருள் ஆய்வு, இயற்பியல், மதுவிலக்கு பொருட்கள் ஆய்வு, குருதி, வடிநீரியல் மற்றும் நஞ்சியியல் ஆகிய 14 சிறப்பு ஆய்வுப் பிரிவுகளை உள்ளடக்கிய தலைமை ஆய்வகத்தை சென்னையில் கொண்டுள்ளது. மாவட்ட காவல் மற்றும் ஆணையரகங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய 9 வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்படுகின்றன. இதனுடன் மாவட்ட அளவில் புலனாய்வு அலுவலர்களுக்கு சேவை வழங்க 33 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

iii) 14 ஆய்வுப் பிரிவுகளின் செயல்பாடுகள் பின்வருமாறு :–

அ) மானுடவியல் :

மானுடவியல் பிரிவு மண்டை ஓடு மற்றும் எஞ்சிய எலும்புப் பகுதிகளைக் கொண்டு இறந்தவரை அடையாளம் காணும் நோக்குடன் ஆய்வு மேற்கொள்கிறது.

ஆ) துப்பாக்கியியல் :

குற்ற நிகழ்விடங்களிலிருந்து சேகரிக்கப்படும் துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் சுடப்பட்ட இலக்குப் பொருட்கள் ஆகியவைகளின் அடையாளம் மற்றும் பயன்பாடு குறித்து துப்பாக்கி ஆய்வு பிரிவில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இ) உயிரியல் :

குருதி, விந்து, எச்சில், சிறுநீர், மலம், முடி, நார்கள், மரக்கட்டை, நீரில் காணப்படும் உயிரின நுண்பாசி ஆகிய உயிரின திரவங்கள் மற்றும் உயிரினம் சார்ந்த பொருட்கள் குறித்து இப்பிரிவு அடையாளம் காணுகிறது.

ஈ) வேதியியல் :

வேதியியல் பிரிவானது கலப்படம் செய்யப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மருந்து தயாரிப்புப் பொருட்கள், வண்ணப் பூச்சு, வண்ணக்

கலவைகள், வார்னிஷ் மற்றும் மேல் பூச்சு ஆகிய ஆய்வுப் பொருட்கள், மண் மாதிரிகள், தூசு, சிதைந்த பொருட்கள், போலி தங்க ஆபரணங்கள், வணிக உரிமைக் குறியீடு முறைகேடு தொடர்பான வழக்குகளில் சம்பந்தப்பட்ட அழகு சாதனம் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவைகளைப் பற்றி ஆய்வு செய்கிறது.

உ) கணினி தடயவியல் :

இப்பிரிவில் கணினியில் உபயோகப்படுத்தப்படும் வன்தட்டுக்கள், யூஎஸ்பி புற நினைவகக் கருவி, மேம்படுத்தப்பட்ட தட்டு, ஒளித்தட்டு, ஸ்மார்ட் கார்டு மற்றும் பல வகையான புற நினைவக கருவிகள் ஆகிய ஆய்வுப் பொருட்களை ஆய்வு செய்கிறது.

ஊ) ஆவணங்கள் ஆய்வுப் பிரிவு :

கையொப்பம், கையெழுத்து, தட்டெழுத்து மற்றும் அச்சு எழுத்துக்கள், சீல்/ரப்பர் ஸ்டாம்ப் பதிப்புகள், பதிவேடுகளில் மாற்றங்கள், மை, காகிதங்கள் போன்றவைகளை ஆய்வுக்குட்படுத்த நேரிடும் வழக்குகளில் இப்பிரிவு ஆய்வு மேற்கொள்கிறது.

எ) மரபணு ஆய்வுப் பிரிவு :

தந்தை / தாய் யார் என்பதில் எழும் சர்ச்சைக்குரிய வழக்குகள், அடையாளம் தெரியாத நபர்கள் மற்றும் எஞ்சிய மனித உடல் பகுதிகளிலிருந்து தனி நபரை அடையாளம் காணல் போன்ற வழக்குகள் தொடர்பான சான்றுப் பொருட்களை மரபணு பிரிவு ஆய்வு மேற்கொள்கிறது.

ஏ) கலால் ஆய்வுப் பிரிவு :

கலால் விதிகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக அனுப்பப்படும் கருப்பஞ்சாறு கசடு, எரிசாராயம், தன்மை மாற்றப்பட்ட எரிசாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள், எரிசாராயம் பயன்படுத்தி தயாரிக்கப்படும் மருந்து மற்றும் வாசனை பொருட்கள், ஆயுர்வேத மருந்து பொருட்கள் ஆகியவைகளை இப்பிரிவு ஆய்வு செய்கிறது.

ஐ) வெடிபொருள்ஆய்வுப் பிரிவு :

வெடிபொருள் ஆய்வு பிரிவு, புலனாய்வு அதிகாரிகளால் குற்ற நிகழ்விடத்தில் கைப்பற்றப்படும் சான்று பொருட்களில் உள்ள வெடி மருந்து பொருளை ஆய்வு செய்து கண்டுபிடிக்கிறது.

ஓ) போதைப் பொருள்ஆய்வுப் பிரிவு :

இயற்கையாக கிடைக்கும் போதைப் பொருட்களான கஞ்சா, அபின், மஸ்காலின், சிலோசைபின் / சிலோசின், காட் மற்றும் செயற்கை முறையிலான போதை மருந்துகள், மனமயக்க மருந்து பொருட்கள் மற்றும் முன்னோடி வேதிப் பொருட்கள் ஆகியவைகளை கண்டறிய இப்பிரிவு உதவுகிறது.

ஓ) இயற்பியல் பிரிவு :

கருவி அடையாளங்கள், கால் / காலணி பதிப்புகள், வாகன டயர் அடையாளங்கள் ஆகியவைகளை அடையாளம் காணுதல், திருடப்பட்ட வாகனம் / துப்பாக்கிகள் / காஸ் சிலிண்டர்கள் ஆகியவைகளின் மீதுள்ள அழித்த எண்களை மீள் கொணர்தல், கள்ள நாணயங்கள் / நோட்டுகள், கண்ணாடி துண்டுகள், வண்ண பூச்சுகள் / பிற நுண்ணிய தடயப் பொருட்கள் ஆகியவைகளின் அடையாளம் காணுதல் மற்றும் அவைகளின் மூல தொடர்பு பற்றி கண்டறிதல் மற்றும் மின் திருட்டு வழக்குகளில் சம்மந்தப்பட்ட மோசடியாக மாற்றம் செய்யப்பட்ட மின் மீட்டர்கள் ஆகியவைகள் தொடர்பாக இப்பிரிவில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஔ) மதுவிலக்கு ஆய்வு பிரிவு :

நறுமண சுவையூட்டும் பொருட்கள், காரமல், கடுக்காய், யூரியா, அமோனியம் சல்பேட், அயோடின் டிஞ்சர், இருமல் மருந்து ஆகியவைகளை கலந்து உருவாக்கப்படும் பல வித மதுபானங்களை இப்பிரிவு பகுப்பாய்வு செய்கிறது.

ஃ) குருதி வடிநீரியல் பிரிவு :

ரத்தம், எச்சில், சதை, எலும்பு, சாம்பல் போன்றவற்றை ஆய்வு செய்து மனித இனமா அல்லது விலங்கினமா என்ற வேறுபாட்டினை நிர்ணயிப்பது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

க) நஞ்சியல் பிரிவு :

பல்வேறு நஞ்சுப் பொருட்கள் மற்றும் மருந்துகளை இப்பிரிவு பகுப்பாய்வு செய்கிறது.

மேலே குறிப்பிடப்பட்ட 14 பிரிவுகளைத் தவிர குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து பெறப்படும் சான்றுப் பொருட்களை புகைப்படம் மூலம் பதிவு செய்வதற்காக ஒரு தனி புகைப்படப் பிரிவு இயங்கி வருகிறது.

தடய அறிவியல் துறையில், 2011 ஆம் ஆண்டில் 64,961 குற்ற வழக்குகளில் தொடர்புடைய 2,52,851 ஆய்வு பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

## XIII. பகுதி–II திட்டம் :

இந்த நிதியாண்டில் காவல் துறையில் கீழ்க்கண்ட பகுதி–II திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 170 கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் | 85.00 |
| 2. | 20 நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்குதல் | 10.00 |
| 3. | கணினி வன்தட்டு பிரதி எடுக்கும் கருவி வாங்குதல் | 3.00 |
| 4. | உயிரியல் பிரிவிற்கான மைக்ரோடோம் கருவி வாங்குதல் | 3.00 |
| 5. | நூலகத்தை நவீனமயமாக்கல் | 3.00 |
| | **மொத்தம்** | **104.00** |

## XIV. முடிவுரை :

காவல் துறைக்கு தேவையான பணியாளர்கள் மற்றும் இதர வசதிகள் வழங்கி இத்துறை முழு முனைப்புடன் செயல்படுவதற்கு ஏதுவாக இவ்வரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பது மேற்கண்ட பத்திகளிலிருந்து தெளிவாகிறது. செம்மையான செயல்பாட்டிற்கான சரியான வழிமுறைகளும் ஆலோசனைகளும் என்னால் வழங்கப்படுகிறது. உத்வேகத்துடனும், நம்பிக்கையுடனும் எந்த ஒரு

பிரச்சனையையும் சந்தித்து தீர்ப்பதற்கு காவல் துறை முழுவதுமாக முடுக்கி விடப்பட்டுள்ளது. **2011–12** ஆம் ஆண்டில் சிக்கலான பிரச்சனைகளுக்கும் சுலபமாக தீர்வு காணப்பட்டதை இதற்கு சான்றாகக் கூறலாம். ரத்தம் ஏதும் சிந்தாமல், சட்டம் ஒழுங்கு பிரச்சனையின்றி கூடங்குளம் அணு மின் நிலையம் வெற்றிகரமாக திறக்கப்பட்டது. அதே நேரத்தில் போராட்டக்காரர்களின் அடிப்படை உரிமைகளான பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாடுகள் ஆகியவற்றை நசுக்காமல் அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டனர். தமிழ்நாடு–கேரளா எல்லையில் சில தீய சக்திகளால் ஏற்பட்ட பிரச்சனைகள் வெற்றிகரமாக தீர்க்கப்பட்டன. சென்னையில் நடந்த பெரிய வங்கிக் கொள்ளைகள் மற்றும் திருப்பூரில் நடந்த நகைக்கடை கொள்ளை போன்றவை வெற்றிகரமாக கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சென்னை, மதுரை மற்றும் திருச்சி போன்ற பெரிய நகரங்களில் சாதாரண மக்களின் நிலங்களை அபகரித்து வந்த நில மோசடி கும்பல்கள் ஒடுக்கப்பட்டு தற்போது அவர்களின் செயல்பாடுகள் கடந்த கால நிகழ்வுகளாகியுள்ளன. நிறைவாக, ஆனால் முக்கியமாக, காவல் துறையின் பணிகளில் அரசாங்கத்திற்கு வெளியேயிருந்து தொடர்ந்து குறுக்கீடு செய்து வந்த தீய சக்திகளின் செயல்பாடுகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டுள்ளன.

எனவே, பொது மக்களுக்கு காவல் துறையின் மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. கடந்த 11 மாதங்களில் காவல் துறையின் செயல்பாட்டுத் திறனில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டு அதனால் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள நல் விளைவுகளை அனைவராலும் காண முடிகிறது. இன்று நிலைத்தன்மை, அமைதி மற்றும் ஒழுங்கு நிலையை தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்நாடு அனைவரின் நல்வரவையும் விரும்பிப் பாராட்டுகிறது.

**ஜெ ஜெயலலிதா**
**முதலமைச்சர்**

## அட்டவணை– I

## மாவட்ட வாரியான நில அபகரிப்பு புகார்கள் மீதான நடவடிக்கை விவரங்கள்

| மாவட்டங்கள் | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவை | குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் | மீட்கப்பட்ட சொத்துக்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஏக்கர் | சதுர அடி | மதிப்பு (ரூபாய் கோடிகளில்) |
| காஞ்சிபுரம் | 114 | 5 | 98 | 122.49 | 0 | 110.46 |
| திருவள்ளூர் | 33 | 2 | 36 | 56.54 | 0 | 13.26 |
| விழுப்புரம் | 95 | 1 | 8 | 26.17 | 1800 | 2.12 |
| கடலூர் | 25 | 0 | 21 | 11.98 | 0 | 2.47 |
| வேலூர் | 26 | 3 | 18 | 90.91 | 62500 | 32.27 |
| திருவண்ணாமலை | 15 | 2 | 27 | 41.64 | 47700 | 10.11 |
| திருச்சி | 8 | 0 | 20 | 13.89 | 0 | 3.70 |
| புதுக்கோட்டை | 7 | 1 | 14 | 0 | 0 | 0 |
| கரூர் | 8 | 4 | 17 | 0 | 0 | 0 |
| பெரம்பலூர் | 8 | 1 | 11 | 0 | 0 | 0 |
| அரியலூர் | 4 | 0 | 8 | 0 | 0 | 0 |
| தஞ்சாவூர் | 13 | 0 | 22 | 0 | 0 | 0 |
| திருவாரூர் | 5 | 0 | 5 | 11.47 | 0 | 6.77 |
| நாகப்பட்டினம் | 5 | 0 | 3 | 0 | 3267 | 1.00 |
| கோயம்புத்தூர் | 39 | 2 | 37 | 62.89 | 0 | 36.33 |
| ஈரோடு | 22 | 2 | 19 | 27.27 | 0 | 4.65 |
| நீலகிரி | 1 | 0 | 0 | 8.09 | 0 | 0.13 |
| திருப்பூர் | 86 | 15 | 40 | 61.20 | 14 | 67.20 |
| சேலம் | 28 | 1 | 63 | 36.88 | 5496 | 26.48 |
| நாமக்கல் | 44 | 2 | 76 | 414.15 | 2250 | 79.27 |
| தருமபுரி | 33 | 2 | 40 | 71.09 | 0 | 7.92 |

## அட்டவணை– I (தொடர்ச்சி)

## மாவட்ட வாரியான நில அபகரிப்பு புகார்கள் மீதான நடவடிக்கை விவரங்கள்

| மாவட்டங்கள் | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது | குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் | மீட்கப்பட்ட சொத்துக்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஏக்கர் | சதுர அடி | மதிப்பு (ரூபாய் கோடிகளில்) |
| கிருஷ்ணகிரி | 24 | 4 | 28 | 27.27 | 0 | 4.68 |
| மதுரை | 48 | 9 | 106 | 5.37 | 319 | 1.04 |
| விருதுநகர் | 32 | 0 | 35 | 93.85 | 0 | 0.74 |
| திண்டுக்கல் | 25 | 0 | 43 | 21.58 | 0 | 0.97 |
| தேனி | 20 | 0 | 34 | 5.94 | 0 | 6.88 |
| இராமநாதபுரம் | 6 | 0 | 25 | 3.31 | 0 | 0.13 |
| சிவகங்கை | 11 | 0 | 6 | 2.50 | 0 | 0.01 |
| திருநெல்வேலி | 83 | 1 | 36 | 11.15 | 0 | 0.34 |
| தூத்துக்குடி | 47 | 0 | 41 | 27.31 | 0 | 0.59 |
| கன்னியாகுமரி | 27 | 0 | 24 | 0 | 0 | 0 |
| சென்னை நகரம் | 168 | 3 | 139 | 43.26 | 171124 | 269.07 |
| சேலம் நகரம் | 15 | 2 | 48 | 0 | 59327 | 1.25 |
| கோயம்புத்தூர் நகரம் | 19 | 3 | 23 | 1.10 | 3055 | 4.19 |
| திருச்சி நகரம் | 18 | 1 | 35 | 4.50 | 64621 | 55.60 |
| மதுரை நகரம் | 16 | 0 | 61 | 0 | 22463 | 2.90 |
| திருநெல்வேலி நகரம் | 47 | 8 | 32 | 13.35 | 0 | 5.51 |
| **மொத்தம்** | **1225** | **74** | **1299** | **1317.15** | **443936** | **758.04** |

<u>அட்டவணை– II</u>

<u>கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்த</u>
<u>கொலைச் சம்பவங்கள் பற்றிய விவரங்கள்</u>

| வ. எண். | ஆண்டு | கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2002 | 1647 |
| 2. | 2003 | 1487 |
| 3. | 2004 | 1406 |
| 4. | 2005 | 1366 |
| 5. | 2006 | 1274 |
| 6. | 2007 | 1521 |
| 7. | 2008 | 1630 |
| 8. | 2009 | 1644 |
| 9. | 2010 | 1715 |
| 10. | 2011 | 1747 |

<u>அட்டவணை– III</u>

<u>குற்ற விகிதம் 2008–2011</u>

| வ. எண் | வருடம் | மக்கள் தொகை (லட்சங்களில்) | இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் பதியப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | குற்ற விகிதம் * |
|---|---|---|---|---|
| 1. | 2008 | 661.06 | 176578 | 267.11 |
| 2. | 2009 | 665.66 | 174691 | 262.43 |
| 3. | 2010 | 670.12 | 185678 | 277.08 |
| 4. | 2011 | 721.39 | 192879 | 267.37 |

*குற்ற விகிதம்: குற்ற நிகழ்வு ஒரு இலட்சம் (1,00,000) மக்கள் தொகைக்கு

## அட்டவணை– IV

## கொலை நிகழ்வுகளுக்கான காரணங்கள்

| வ. எண். | காரணங்கள் | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| 1. | குடும்பத் தகராறு | 461 | 444 | 454 | 440 |
| 2. | வாய்த் தகராறு | 427 | 372 | 308 | 325 |
| 3. | சொந்தப்பகை | 356 | 384 | 413 | 421 |
| 4. | காதல் மற்றும் பாலினக் காரணங்கள் | 155 | 217 | 334 | 347 |
| 5. | பணம் கொடுக்கல் வாங்கல் | 119 | 68 | 77 | 59 |
| 6. | குடிபோதையில் தகராறு | 91 | 96 | 39 | 12 |
| 7. | வரதட்சணை | 8 | 9 | 10 | 7 |
| 8. | அரசியல் காரணங்கள் | 2 | 4 | 3 | 3 |
| 9. | இதர காரணங்கள் | 11 | 46 | 73 | 131 |
| 10. | சாதி பாகுபாடு | 0 | 4 | 4 | 2 |
| | மொத்தம் | 1630 | 1644 | 1715 | 1747 |

## அட்டவணை–V

## சாலை விபத்துக்கள் பற்றிய விவரங்கள்

| வ. எண் | வருடம் | வாகனங்களின் எண்ணிக்கை | விபத்துக்களின் எண்ணிக்கை | சதவிகிதம் | இறந்தவர்களின் எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2002 | 6041312 | 53503 | 0.89 | 9939 | 0.15 |
| 2. | 2003 | 6591224 | 51025 | 0.77 | 9275 | 0.13 |
| 3. | 2004 | 7205847 | 52508 | 0.73 | 9507 | 0.12 |
| 4. | 2005 | 7966200 | 53878 | 0.68 | 9760 | 0.11 |
| 5. | 2006 | 8851672 | 55145 | 0.62 | 11009 | 0.11 |
| 6. | 2007 | 9807155 | 59140 | 0.60 | 12036 | 0.11 |
| 7. | 2008 | 10789970 | 60409 | 0.56 | 12784 | 0.11 |
| 8. | 2009 | 11820613 | 60794 | 0.51 | 13746 | 0.11 |
| 9. | 2010 | 13119713 | 64996 | 0.50 | 15409 | 0.11 |
| 10. | 2011 | 14861695 | 65873 | 0.44 | 15422 | 0.10 |

## அட்டவணை–VI

## காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒதுக்கிய நிதி விவரங்கள்

(ரூபாய் கோடியில்)

| வருடம் | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மொத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 2000–01 | 76.50 | 76.50 | 153.00 |
| 2001–02 | 68.10 | 68.10 | 136.20 |
| 2002–03 | 68.10 | 68.10 | 136.20 |
| 2003–04 | 52.47 | 36.67 | 89.14 |
| 2004–05 | 56.76 | 37.84 | 94.60 |
| 2005–06 | 65.46 | 21.82 | 87.28 |
| 2006–07 | 59.40 | 19.80 | 79.20 |
| 2007–08 | 75.75 | 25.25 | 101.00 |
| 2008–09 | 51.00 | 17.00 | 68.00 |
| 2009–10 | 60.67 | 20.22 | 80.89 |
| 2010–11 | 92.06 | 30.68 | 122.74 |
| 2011–12 | 57.97 | 19.32 | 77.29 |

## அட்டவணை– VII

## புற நோயாளிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை தலைமையிடங்கள்

| வ. எண் | பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–III ஆம் அணி, வீராபுரம், திருவள்ளூர் மாவட்டம். |
| 2. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–IV ஆம் அணி, கோவைபுதூர், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 3. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–VI ஆம் அணி, மதுரை. |
| 4. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–VII ஆம் அணி, போச்சம்பள்ளி, தருமபுரி மாவட்டம். |
| 5. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–IX ஆம் அணி, மணிமுத்தாறு, திருநெல்வேலி மாவட்டம். |
| 6. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–X ஆம் அணி, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம். |
| 7. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–XI ஆம் அணி, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். |
| 8. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–XII ஆம் அணி, மணிமுத்தாறு, திருநெல்வேலி மாவட்டம். |
| 9. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–XIII ஆம் அணி, பூவிருந்தவல்லி, சென்னை. |
| 10. | தமிழ்நாடு சிறப்புக் காவல் படை–XIV ஆம் அணி, பழனி, திண்டுக்கல் மாவட்டம். |

# அட்டவணை– VIII

## புற நோயாளிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ள ஆயுதப் படை தலைமையிடங்கள்

| வ. எண் | பெயர் |
|---|---|
| 1. | திருச்சி நகரம் |
| 2. | காஞ்சிபுரம் |
| 3. | திருவள்ளூர் |
| 4. | திருவண்ணாமலை |
| 5. | விழுப்புரம் |
| 6. | திருச்சி |
| 7. | பெரம்பலூர் |
| 8. | அரியலூர் |
| 9. | கரூர் |
| 10. | புதுக்கோட்டை |
| 11. | தஞ்சாவூர் |
| 12. | நாகப்பட்டினம் |
| 13. | திருவாரூர் |
| 14. | கோயம்புத்தூர் |
| 15. | ஈரோடு |
| 16. | திருப்பூர் |
| 17. | நீலகிரி |
| 18. | நாமக்கல் |
| 19. | தருமபுரி |
| 20. | கிருஷ்ணகிரி |
| 21. | திண்டுக்கல் |
| 22. | இராமநாதபுரம் |
| 23. | சிவகங்கை |
| 24. | தேனி |
| 25. | தூத்துக்குடி |
| 26. | கன்னியாகுமரி |

## அட்டவணை– IX

### 31.03.2012 அன்றைய நிலவரப்படி
### தமிழ்நாடு காவல்துறையில் உள்ள வாகனங்களின் வகை வாரியான நிலவரம்

| வாகனங்களின் வகைகள் | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கனரக வாகனங்கள் | 744 |
| மிதரக வாகனங்கள் | 1587 |
| இலகுரக வாகனங்கள் | 4863 |
| இரு சக்கர வாகனங்கள் | 6152 |
| இதர வாகனங்கள் | 317 |
| மொத்தம் | 13663 |

| | | |
|---|---|---|
| கனரக வாகனங்கள் | : | பேருந்து / லாரி |
| மிதரக வாகனங்கள் | : | சிறிய பேருந்து / வேன் |
| இலகுரக வாகனங்கள் | : | கார் / ஜீப் |
| இரு சக்கர வாகனங்கள் | : | மொபெட் / மோட்டார் சைக்கிள் |
| இதர வாகனங்கள் | : | வஜ்ரா / க்ரேன் / கைதி வழிக்காவல் வாகனம் / தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனம் /ஆம்புலன்ஸ் / ஆட்டோரிக்ஷா / பிபி கார் கன்டெய்னர் |

## அட்டவணை– X

## 2005–06 முதல் 2011–2012 வரையிலான புதிய காவலர் குடியிருப்புகள் ஒப்பளிக்கப்பட்ட விவரங்கள்

| வ. எண். | வருடம் | ஒப்பளிக்கப்பட்ட | |
|---|---|---|---|
| | | குடியிருப்புகளின் எண்ணிக்கை | குடியிருப்புகளின் மதிப்பு (ரூ.லட்சத்தில்) |
| 1 | 2005–06 | 4000 | 17484.00 |
| 2 | 2006–07 | 3000 | 15066.00 |
| 3 | 2007–08 | 2000 | 11006.00 |
| 4 | 2008–09 | 2000 | 13172.00 |
| 5 | 2009–10 | 2000 | 14223.00 |
| 6 | 2010–11 | 2000 | 15888.00 |
| 7 | 2011–12 | 3440 | 28795.00 |

* * * * *